REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2020 ஒக்டோபர் 5 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 236 | October 05,Monday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

## காய்ச்சல் இருந்தால் PCR செய்யவும்

### இராணுவத் தளபதி சவேந்திர

திவுலப்பிட்டிய பகுதியில் அடையாளம் காணப்பட்ட பெண்ணின் மகளுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 39 வதான

06

### திவுலபிட்டியவில் தாய், மகளுக்கு கொரோனா தொற்று

# சமூகத்தில் கொரோனா பரவுவதை தடுக்க அரசு துரித நடவடிக்கை

- கம்பஹா மாவட்டத்தில் 7 கிராமங்கள் முடக்கம்
- நாடு முழுவதுமுள்ள பாடசாலைகள் பூட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட பெண்ணொருவர் நேற்றைய தினம் திவுலப்பிட்டிய பகுதியில் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவருடன் தொர்புடைய 400பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

திவுலபிட்டிய காதுரவப் பகுதியில் இயங்கும் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த பெண்ணுக்கே வைரஸ் தொற்று நேற்றுக் காலை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில்

04




பிரெண்டெக்ஸ் ஊழியர்கள் பீ.சி.ஆர். பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப்படுவதையும், திவுலப்பிட்டி நகரிலுள்ள கடைகள் பூட்டப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: சமந்த வீரசிறி)

## ரிஷாட் பதியுதீனுடன் எந்தவொரு அரசியல் தொடர்பும் இல்லை

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுடன் எந்தவொரு அரசியல் தொடர்புகளையும் தமது அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் முதலாவதும் முக்கியமானதுமான பொறுப்பாகும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி அதனை உறுதிப்படுத்தும் வகையில் இப்போதும் உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்றது போன்று நபர்களை கைது செய்வது அல்லது தன்னிச்சையாக விடுதலை செய்வதற்கான அதிகாரத்தை அரசியல்வாதிகளின் கைகளில் கொடுப்பதற்கு தாம் தயாரில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது முகநூலில் இதனைப் பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது அரசாங்கத்தின் முதலாவதும் முக்கியமானதுமான பொறுப்பாகும். அதை உறுதி செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் இன, மத அல்லது வேறு எவ்வித மான

04

## கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்

### சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் வழங்கிய உச்சளவு ஒத்துழைப்பை மீண்டும் வழங்கவேண்டும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கோரியுள்ளார். மற்றுமொரு கொரோனா வைரஸ் தொற்று நோயாளி சமூகத்திலிருந்து இனங்காணப்பட்டுள்ள நிலையில் நாட்டிலிருந்து வைரஸ் தொற்று நிலைமையை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அதற்காக அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.



திவுலபிடிய பகுதியில் சமூகத்திலிருந்து மற்றுமொரு வைரஸ் தொற்று பெண் இனங்காணப்பட்டுள்ளதையடுத்து நேற்றைய தினம் ராஜகிரியிலுள்ள கொரோனா வைரஸ் தடுப்பு தேசிய கட்டுப்பாட்டு நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கம் அளிக்கும்போதே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நீண்ட காலங்களுக்குப் பின் சமூகத்திலிருந்து வைரஸ் தொற்று நோயாளியொருவர் பதிவாகியுள்ளார். நாட்டு மக்கள் கடந்த காலங்களில் வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு வழங்கிய ஒத்துழைப்பை மீண்டும் வழங்க வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

04

## ஆசன எண்ணிக்கைக்கே அனுமதி; பஸ்,ரயிலில் முகக் கவசம் கட்டாயம்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் இனம் காணப்பட்டுள்ள நிலையில் போக்குவரத்து அமைச்சு இன்று முதல் பயணிகள் போக்குவரத்து நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

அதற்கிணங்க பயணிகள் முகக்கவசம் அணிவது கண்டிப்பானது என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டிகளில் அனைத்து பயணிகளும் சாரதியும் நடத்துனரும் முகக் கவசம் அணிய வேண்டும் என்றும் பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரயில் பயணிகள் ரயில் நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் முன்பாக கைகளை கழுவுவது, முகக் கவசங்கள் அணிவது மற்றும் சமூக இடைவெளியை பேணுவது

04

### மாளிகைக்காடு சுனாமி இளைஞன் விவகாரம்:

## சம்மாந்துறை நீதிமன்றில் இன்று விசாரணை

**அம்பாறை மத்திய குறூப் நிருபர்**

சுனாமியின் போது காணாமல் போன மாளிகைக்காடு இளைஞன் விவகாரம் இன்று (திங்கள்) சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறும் என சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜயலத் தெரிவித்தார்.

தனது பிள்ளையை இழந்த மாளிகைக்காடு அபுசாலி சித்தி கமாலியாவின் மகன் மீண்டும் திரும்பிய விவகாரத்தையடுத்து அம்பாறை நகர் பிரதேசத்தை சேர்ந்த வளர்ப்புத் தாயாகக் கூறப்படும் முகமது ஜுனைதீன் நூறுல்

04

### பிரான்சில்

## ஒரே குடும்பத்தில் இலங்கையர் ஐவர் கொலை

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 இலங்கையர்கள் பிரான்சின் நாய்சிலி செக் நகரின், ருரி இமானுவேல் அரகோ வீதியில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீதியில் உள்ள மதுபான கூடம் ஒன்றுக்கு படுகாயமடைந்த நிலையில் வந்த இளைஞன் ஒருவர் உதவிக் குழுவை அழைக்கும் படி கோரியுள்ளார்.

அத்துடன் அவர் "எனது மாமா என் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கொலை செய்துவிட்டார்" என்றும் அந்த இளைஞர் மதுபானக் கூட நிர்வாகியிடம் தெரிவித்துள்ளார்.

தகவல் அறிந்து

04

### சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தம்;

## அபராதத் தொகை 10 மடங்கு; சிறைத்தண்டனையும் அதிகரிப்பு

**எம்.ஏ அமீனுல்லா**



சுற்றுச் சூழல் சட்டத்திருத்தத்தினூடாக தற்பொழுது விதிக்கப்படும் அபராதங்கள் பத்து மடங்காக அதிகரிக்கப்படவிருப்பதுடன் சிறைவாசகாலமும் நீடிக்கப்பட இருப்பதாக சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று (04) சந்தித்து, அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

தற்பொழுது நாட்டில பாரிய சுற்றுச் சூழல் சேதம் ஏற்படுவதாகவும் அது அரசாங்கத்தின் அனுசரணையில் இடம்பெறுவதாகவும் சில சமூக ஊடகங்கள் தவறான

04

### வெளிநாடுகளில் பணிபுரிந்த

## 64 இலங்கையர் கொரோனா தொற்றினால் உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கையர்கள் 64 பேர் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றுவரை வெளிநாட்டில் பணிபுரியும் 2600 இலங்கையர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மேற்படி பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

ஜோர்தான் ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்த இலங்கையர் ஒருவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிர் இழந்துள்ளார். அந்த ஆடைத் தொழிற்சாலையில் 350 க்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் ஜோர்தானில் சாக்கடலுக்கு அருகிலுள்ள மத்திய நிலையத்தில் மருத்துவக் கண்காணிப்புக்கு

04

## கொரோனா தொற்றின் தீவிரத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு

மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய பகுதியில் பொது முடக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் ஒவ்வொரு இலங்கையர்களும் கொரோனா தொற்றின் தீவிரத்தை புரிந்துகொள்ள வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, சுககாதார அமைச்சு வெளியிட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை அவசியம் கடைபிடிக்க வேண்டும் என்றும் தயவு செய்து பீதியடைய வேண்டாம் என்றும் கோரியுள்ளார். மேலும் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறும் பொது மக்களிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். திவுலபிடிய பகுதியை சேர்ந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து,



04

### 20க்கு எதிராக

## இன்று முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 20வது திருத்தத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க முதற் கட்டமாக இன்று நாடளாவிய ரீதியில் துண்டுப் பிரசுர விநியோகம் இடம்பெறுவதுடன் பதாதைகள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி யானது

04

# 20 ஆவது திருத்தம்; உள்ளடக்க வேண்டிய அம்சங்கள்

### சுதந்திர முன்னணி பிரதமருக்கு கடிதம்

20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தில் குழுநிலை சந்தர்ப்பத்தின் போது உள்ளடக்க வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணி, பிரதமர் மஹிந்த ராஜபக்சவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.



பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போது 20 ஆவது அரசிலமைப்பு திருத்தச் சட்டமூலத்தில் சேர்க்கப்படவுள்ள அரசாங்கத்தின் திருத்தங்களாக சட்டமாஅதிபர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஆவணத்தில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவங்ச முன்வைத்த எவ்வித திருத்தங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பதை கவலையுடன் அறியத்தருவதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த திருத்தங்களில் 3 திருத்தங்கள் மிகவும் தீர்மானமிக்கவை எனவும்

04

## 20ஆவது திருத்தத்திற்கு எதிராக சகலரும் ஒன்றிணைய வேண்டும்

### தமிழ் எம்.பிக்களை கோருமாறு மக்களுக்கு அழைப்பு

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**



20 ஆவது அரசியலமைப்பை எதிர்த்து வாக்களிக்குமாறு சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அத்துடன், 20ஆவது திருத்த சவாலை முறியடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற "இலங்கையில் அரசியலமைப்பின் 20வது திருத்தம்" ஆய்வரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20வது அரசியலமைப்பு திருத்தம் ஏன் இவ்வளவு

04

## நீராடச் சென்ற மூன்று இளைஞர்கள் உயிரிழப்பு; சடலங்கள் நேற்று மீட்பு

நீர்கொழும்பு – செத்தபாடு – கம்மல்தொட்ட முகத்துவாரம் கடற்பகுதியில் நீராட சென்று காணாமல் போன 3 இளைஞர்களும் சடலமாக நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞர்களில் இரண்டு பேர் தலவாக்கலையை சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் பதுளை நமுனுகுலயை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த மூவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு – கம்மல்தொட்ட முகத்துவாரம் கடற்பகுதிக்கு, 7 இளைஞர்கள் நீராடச் சென்ற நிலையில், அவர்களில்

04

# சிறந்த விற்பனை முகவர்களுக்கு லேக்ஹவுஸ் வழங்கிய சிறப்பு விருது



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 5 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්


இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் புரட்டாதி 19

ராகுகாலம் : காலை : 6.00 - 7.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்தமரண யோகம்

நட்சத்திரம்: பரணி பகல் 2.36

திதி: சதுர்த்தி

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.43 |
| லுஹர் | 12.01 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.01 |
| இஷா | 07.11 |







இராணுவத்தின் 71வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வ மத ஆராதனைகளில் கொழும்பு 13 ஸ்ரீ பொன்னம்பலம் வானேஸ்வரர் ஆலயத்தில் விசேட யாக அபிஷேக ஆராதனை இடம்பெற்றன. ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ சுரேஸ் குருக்களின் தலைமையில் கிரியைகள் நடாத்தப்பட்டன. அத்தோடு கொள்ளுபிட்டி ஜும்மா பள்ளிவாசலில் மௌலவி அம்ஹர் ஹகம்டீன் துஆ பிரார்த்தனை மேற்கொண்டதோடு பள்ளிவாசல் தலைவர் முஹமட் கலீல், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வாவுக்கு நினைவு சின்னம் வழங்கினார். (படங்கள்: ருசைக் பாரூக்)

# வீதி ஒழுங்குவிதிகளை மீறுவோருக்கு இன்று முதல் கடும் சட்ட நடவடிக்கை

## போக்குவரத்து பொலிஸ் எச்சரிக்கை

**லோரன்ஸ்செல்வநாயகம்**

வீதி ஒழுங்குவிதி நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக இன்று(05) முதல் கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் இந்திக ஹபுகொட இது தொடர்பில் தெரிவிக்கையில்;

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதோடு அது தொடர்பில் கண்காணிப்புகளை மேற்கொள்வதற்கு விமானப் படையினரின் உதவியும் பெறப்படுமென்றும் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக இன்று முதல்

04



# 16 கோடி ரூபா பெறுமதியான போதை பொருளுடன் ஏழு பேர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

16 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சுமார் 17 கிலோ ஹெரோயின் போதைப்பொருளுடன் மேற்படி 7 பேரும் கொஸ்வத்த, கிரிமெட்டியான மற்றும் வென்னப்புவ பிரதேசங்களில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல்களையடுத்து அதிகாரிகள் குழு மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது நேற்று முன்தினம் அதிகாலை மேற்படி7 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கிரிமெட்டியான பிரதேசத்தில் 360 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையையடுத்து அவர் வழங்கிய தகவல்களுக்கிணங்க மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தலைமையகம் தெரிவித்தது. அவர்கள் வெளியிட்ட தகவல்களையடுத்து கிரிமெட்டியான பிரதேசத்திலிருந்து மேலும் ஒரு தொகை ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள மேற்படி சந்தேக நபர்கள் ஏழு பேரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (ஸ)



630 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட ரம்புக்கன பிரதேச செயலகத்தின் இரண்டு மாடி கட்டிடத் தொகுதியை அமைச்சர் சமல் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தாரக்க பாலசூரிய, உட்பட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: காவத்தை தினகரன் விசேட நிருபர்)

# 15 விமான நிலையங்களை இணைத்து உள்ளூர் விமான சேவைகளை விஸ்தரிப்பதற்கு முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய 15 விமான நிலையங்களை ஒன்றிணைத்து உள்ளூர் விமான போக்குவரத்து சேவைகளை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக குறிப்பிட்ட விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி சானக்க,

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து உள்ளூர் விமான சேவைகளை முன்னெடுப்பதற்கு மூன்று விமான நிறுவனங்கள் தற்போது இணக்கம் தெரிவித்துள்ளதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே நாட்டில் உள்ள பிரதான 5 விமான நிலையங்களுடன் 15 சிவில் விமான நிலையங்களை ஒன்றிணைத்து விமான சேவைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலும் உள்ளூர் விமான சேவைகளை விஷ்தரிக்கும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க நாடளாவிய ரீதியில் உள்ள 15 விமான நிலையங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இந்த சேவை சிறப்பாக முன்னெடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க தற்போது விமான நிலையங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர்,மேற்படி விமான சேவைகள் தொடர்பில் விமான சேவை நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

# 25 ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கை மேற்கொள்வதற்கான திட்டம் ஆரம்பம்

**மர்லின் மரிக்கார்**

உள்நாட்டுக்கு தேவையான சோளத்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மகாவலி வலயங்களில் 25 ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கையை மேற்கொள்ளும் தேசிய வேலைத் திட்டம் மகாவலி வலயங்கள் சார் கால்வாய்கள் மற்றும் குடியிருப்பு பொதுவசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தலைமையில் மகாவலி எல் வலயத்திற்குட்பட்ட வெலிஓயா, நிக்கவெவ பிரதேசங்களில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்நாட்டுக்கு அவசியப்படும் சோளத் தேவையை நிறைவு செய்வதற்காக வருடமொன்றுக்கு மூவாயிரம் மில்லியன் ரூபா அதன் இறக்குமதிக்காகச் செலவிடப்படுகின்றது. அதனை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் போது இவ்வளவு தொகை அந்நிய செலாவணியை நாட்டினுள் மீதப்படுத்திக் கொள்ள முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் இத்திட்டத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றும போது குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாத முடிவுக்குள் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை ஆரம்பிக்கப்பட உள்ள போதிலும் அவற்றில் 3 ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கை தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வருடமொன்றுக்கு இந்நாட்டின் சோளத் தேவை ஐந்து இலட்சம் மெற்றிக் தொன்களாகும். அவற்றில் அரைப்பகுதி அதாவது இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன்களே தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. எஞ்சிய இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக்தொன் சோளமும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

இவ்விடயத்தில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் அடிப்படையில் உள்நாட்டுக்கு தேவையான சோளத்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நடவடிக்கை நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தலைமையில் ஆரம்பித்து வைக்கபட்டிருக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் மகாவலி திட்டத்தின் 10 வயங்களிலும் இச்செய்கை முன்னெடுக்கப் படவுள்ளது.

# 200 உள்நாட்டு உணவுகள் ஒரே சமயத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டம்

பாவனையாளர்களுக்கு குறைந்த விலையில் உயர் தரத்திலான 200 இலங்கை உற்பத்தி பொருட்களை (Made in Srilanka) ஒரே நேரத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் திட்டமொன்றை கைத்தொழில் அபிவிருத்தி மன்றம் (IDF) அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமரும் நியதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ, கைத்தொழில் அமைசர் விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் இவ் இருநூறு உற்பத்திகள் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தப்படுமென கைத்தொழில் அபிவிருத்தி மன்றத்தின் பணிப்பாளரும் மைக்ரோ இலெக்ரிக்கல் இன்டர்நெஷனல் தனியார் நிறுவன தலைவர் தம்மிக்க சமரவிக்ர தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு பாரமில்லாது புதிய உற்பத்திகளை மேற்கொள்ளும் 200 தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தும் இத்திட்டத்தினூடாக தேசியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை பெற்றுக்கொள்ள பாவனையாளர்களை ஊக்குவிக்க எதிர்பார்ப்பதாகவும் கூறிய அவர் இத் திட்டத்தை தமது மன்றத்தின் ஆலோசகர் கலாநிதி உதய இந்திரரத்ன மற்றும் தலைவர் சம்பத் மாயாகடுவவின் தலைமையில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தம்மிக சமரவிக்ரம தெரிவித்தார்.

# நியூ டயமன் கப்பல் இலங்கை கடற்பரப்பிலிருந்து வெளியேற்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை கடற்பரப்பில் கிழக்கில் சங்கமன்கண்டி பகுதியில் அண்மையில் தீ அனர்த்தத்துக்குள்ளான நியூ டயமன் கப்பல் தற்போது மத்திய கிழக்கு கடற் பிராந்தியத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வருவதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

மேற்படி தீ அனர்த்த பாதிப்பு நட்டஈடாக இலங்கைக்கு 442 மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுக்கொடுக்க மேற்படி கப்பல் நிறுவனம் இணக்கம் தெரிவித்ததையடுத்து அந்தக் கப்பலை இலங்கை கடற்பரப்பில் இருந்து கொண்டு செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அந்த நிலையிலேயே கப்பல் இலங்கை கடற்பரப்பில் இருந்து கொண்டுசெல்லப்படுகிறது என கடற் படையினர் தெரிவித்தனர்.

இந்தியாவின் பக்கமாக கொண்டு செல்லப்பட்ட கப்பல் தற்போது மத்திய கிழக்கு கடற்பிராந்தியத்திற்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மேற்படி கப்பல் இலங்கை கடற்பரப்பில் இருந்து சர்வதேச கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதற்கு மேலும் ஒருநாள் செல்லலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் மத்திய கிழக்கு கடற் பிராந்தியத்தில் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அங்கு நங்கூரம் இடப்பட்டு

04

## செய்தித் துளிகள்

### ஒரு வாரத்திற்கு களனி பல்கலை பூட்டு

களனி பல்கலைக்கழகம், கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத மருத்துவ கல்லூரி, நைவல உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஆகியன ஒரு வாரத்திற்கு மூடப்படுவதாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனை முன்னிட்டு விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு மாணவர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. திவுலப்பிடிய பகுதியில் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிடிய மற்றும் மினுவங்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு பொலிஸ் ஊடரங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### ஹெரோயினை சூட்சுமமாக கடத்திய இளைஞன் கைது

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைபள்ளி வீதியில் சந்தேகத்திற்கிடமாக மோட்டார் சைக்கிளில் நடமாடிய 29 வயதுடைய இளைஞனை சனிக்கிழமை இரவு வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் சோதனை செய்தனர்.

இதன் போது குறித்த இளைஞன் வருகை தந்த மோட்டார் சைக்கிளின் ஆசனத்தின் கீழ் தீப்பெட்டி ஒன்றில் மறைத்து சிறு பொதி செய்யப்பட்ட ஹெரோயின் பக்கெற்றுக்கள் மீட்கப்பட்டதுடன்

04

### பூர்த்தி செய்யப்படாத வீதி அபிவிருத்திகளை பொறுப்பேற்க அதிகார சபை முடிவு

ஒப்பந்தக்காரர்களால் பூர்த்தி செய்யப்படாத வீதி அபிவிருத்தி பணிகளை பொறுப்பேற்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆலோசனையின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஒப்பந்த காலம் நிறைவடைந்தும், பணிகள் நிறைவடையாதிருக்கும் வீதிகளை கண்டறிந்து அவற்றை தாம் பொறுப்பேற்று வீதி பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாறான

04

### நீர்கொழும்பு, மஹர சிறைச்சாலைகளில் கைதிகளை பார்வையிடத் தடை

நீர்கொழும்பு மற்றும் மஹர சிறைசாலைகளுக்கு கைதிகளை பார்வையிட செல்வது மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

திவுலபிடிய பிரதேசத்தை சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே நீர்கொழும்பு மற்றும் மஹர சிறைசாலைகளுக்கு கைதிகளை பார்வையிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## ஒரே குடும்பத்தில் இலங்கையர் ...

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், வீடு முழுவதும் ரத்தம் தெறித்திருக்க 5 பேர் சடலமாக வீழ்ந்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்துள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். "சம்பவ இடத்தில் இருந்து கத்தியும், பெரிய சுத்தியலும் மீட்கப்பட்டுள்ளது" என பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் நடத்திய நபர் சம்பவ இடத்தில் கோமா நிலையில் இருந்ததாகவும், இவர்கள் அனைவரும் இலங்கையர்கள் எனவும் பிரான்ஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

## ரிஷாட் பதியுதீனுடன் எந்தவொரு...

பயங்கரவாதத்திற்கோ அல்லது அடிப்படைவாதத்திற்கோ இடமளிப்பதில்லை.

அனைத்து பிரஜைகளும் பயம், சந்தேகமின்றி வாழக்கூடிய உரிமையை பாதுகாப்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

2019 ஏப்ரல் 29ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு பாதுகாப்புத் துறையில் நிலவிய பாரிய வீழ்ச்சியே காரணம். பயங்கரவாதம் அல்லது அடிப்படை வாதத்திற்குத் துணை போகின்ற அரசியல் மற்றும் சமூக பின்னணி நாட்டிற்குள் உருவாக்கப்பட்டிருந்தமையும் அதற்கு ஒரு காரணமாகும்.

அந்த வகையில் பயங்கரவாதமோ அல்லது அடிப்படை வாதமோ பலப்படுத்தப்படுகின்ற அனைத்து வழிகள் மற்றும் செயற்பாடுகளை துடைத்தெறிவதற்கு எமது அரசாங்கம் பின்நிற்க மாட்டாது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த விசாரணைகளுக்கு இணங்க கடுமையான சட்டம் பிரயோகிக்கப்படும்.

குறிப்பிட்ட அதிகாரிகளினால் ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருந்தால் அவை நிவர்த்தி செய்யப்படும். ரிஷாட் பதியுதீன் எம்.பியுடன் எந்த அரசியல் 'டீல்'களும் எமது அரசாங்கத்திற்கு கிடையாது.

மக்கள் இதுவரை எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்படமாட்டேன்.

எதிர்காலத்தில் அந்த நம்பிக்கையை மேலும் பலப்படுத்தும் வகையில் செயற்படுவேன் என மக்களுக்கு உறுதியளிக்கின்றேன் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ஸ)

## காய்ச்சல் இருந்தால்...

குறித்த பெண் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதனை தொடர்ந்து அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனை அடுத்து அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவரது மகளுக்கும் கொரோனா தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர் 16 வயதுடையவர் என இராணுவ தளபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை கம்பஹா மாவட்டத்தில் வசிக்கும் எந்தவொரு நபருக்கும் காய்ச்சல் அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பி.சி.ஆர் பரிசோதனை செய்யுமாறு அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

திவுலப்பிட்டிப் பகுதியில் புதிதாக கொரோனா தொற்று நோயாளியொருவர் இனம் காணப்பட்டுள்ள நிலையில் திவுலப்பிட்டி மற்றும் மினுவாங்கொடை பிரதேசங்களில் வசிக்கும் முப்படை வீரர்களை மறு அறவித்தல் வரை கடமைக்குத் திரும்ப வேண்டாம் எனவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க திவுலப்பிட்டி மற்றும் மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள இராணுவ வீரர்கள், விமானப்படை வீரர்கள், கடற்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கே மறு அறிவித்தல் வரை கடமைக்குத் திரும்ப வேண்டாமென இராணுவத் தளபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## 20ஆவது திருத்தத்திற்கு எதிராக ...

அவசரமாக கொண்டு வரப்படுகின்றது என்பதற்கான பதில் என்னிடம் இருக்கின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் காலம் நிறைவடைகின்றது. நிறைவடைந்த பின்னர், தற்போதுள்ள அரசியலமைப்பின் படி புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும். தமது கட்சி சார்ந்தவர்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்க முடியும் என்பதற்காக இந்த அவசர நடவடிக்கைகள் எடுப்பதாக குற்றஞ்சாட்டினார். நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல்கள் கடந்த சில காலங்களில் நடந்திருந்தன.

20வது திருத்தம் எமது ஜனநாயகத்திற்கு விரோதமானது. 19வது திருத்தத்தை அகற்றுவோம் என்பதற்கும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை வலுவானதாக்குவதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது.

ஒட்டுமொத்தமாக, 20வது திருத்தத்தை எதிர்க்கும் மனநிலையில் தான் இருக்கின்றார்கள். அது நல்ல விடயம். இதில் எமது எதிர்ப்பு பல மட்டங்களில் இருக்க வேண்டும். 20வது திருத்தம் நிறைவேற்றப்படுவதை தவிர்ப்பதற்கு, நாங்கள் பலமாக செயற்பட வேண்டும். 20வது திருத்த சட்டத்தை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துடன், அங்கம் வகிக்கும் கட்சிகளிடம் தமிழ் மக்கள் கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

எமது பிரதேசங்களில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். புதிய அரசியலமைப்பு இந்த நாட்டிற்குத் தேவையானது. ஆனால், புதிய அரசியலமைப்பை புறந்தள்ளி, 20வது திருத்தத்தை கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 20வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், புதிய அரசியலமைப்பு என்ற பேச்சுக்கே இடமளில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். எமக்கான இனப்பிரச்சினை தீர்வுகள் உள்வாங்கப்பட வேண்டும்.

## 20ஆவது திருத்தம்...

அது தொடர்பில் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்தக் கட்டித்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ளாது செயற்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மக்கள் ஆணை மற்றும் அரசாங்கத்தின் நற்பெயருக்கு குந்தகம் ஏற்படுகின்றது என்பதை பிரதமர் ஏற்றுக்கொள்வார் என நம்புவதாகவும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு அதிக பங்குகள் உள்ள நிறுவனங்கள் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களை கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற கணக்காய்வில் இருந்து விடுவிப்பது முதலாவது விடயமாக தேசிய சுதந்திர முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது. மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக வர்த்தமானியில் அறிவிக்காமல் அவசரமாக சட்டங்களை நிறைவேற்றுவது தொடர்பிலும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு ஏற்படலாம் என தேசிய சுதந்திர முன்னணியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை தடையை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அப்பால் தூதுவர்கள் மற்றும் அரச உயர் பதவிகளுக்கும் விதிப்பதற்கு மாறாக அந்த தடை முழுமையாக தளர்த்தப்பட்டுள்ளமை மூன்றாவது விடயமாக தேசிய சுதந்திர முன்னணியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, அரசாங்கம் என்ற வகையில் அந்த தவறுகளை திருத்த வேண்டியுள்ளதாகவும் தேசிய சுதந்திர முன்னணி, பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

இது மக்களின் ஆணையை பாதுகாப்பதற்காக தாம் கொண்டுள்ள அரசியல் நிலைப்பாடு எனவும் அரசாங்கம் அந்த அரசியல் நிலைப்பாட்டினை பொருட்படுத்தாமல் செயற்படுமாயின் அதன் அரசியல் பொறுப்பை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனவும் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சி தலைவர் அமைச்சர் விமல் வீரவங்சவின் சார்பில் கட்சி செயலாளர் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

## கொரோனா வைரஸ் பரவுவதை...

தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்கள் வழங்கிய ஒத்துழைப்பு மூலமே கடந்த காலங்களில் வைரஸ் தொற்றை முற்றாகக் கட்டுப்படுத்த முடிந்தது.

அதற்கிணங்க சுகாதாரத் துறையினரின் ஆலொசனைகளைப் பின்பற்றி முகக் கவசம் அணிதல் ஒரு மீட்டர் இடைவெளி, கைகளைக் கழுவுதல் உள்ளிட்ட செயற்பாடுகளைத் தவறாது மேற்கொள்ள வேண்டும்.

ஒரேயொரு வைரஸ் தொற்று நோயாளியே இனங்காணப்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து நாட்டை பாதுகாத்துக் கொள்வதற்கு நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

உலகில் ஏனைய நாடுகளை விட எமது நாட்டு மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றுபவர்கள்.

நாட்டை வைரஸ் தொற்றிலிருந்து நீக்குவதற்கு எமக்கு அது பெரும் உறுதுணையாக அமைந்தது.

சர்வதேச ரீதியில் பத்து இலட்சம் பேர் வரை உயிரிழந்துள்ள நிலையில் இதற்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

கொரோனா வைரஸ் தொற்று சுவாசத்தினூடாகவும் தொற்றக்கூடிய நோயாகும்.

அதற்கிணங்க மக்கள் சனப்பெருக்கம் அதிகமான இடத்தில் நிற்பதைத் தவிர்த்துக் கொள்வது அவசியம்.

இசைக் கச்சேரிகள் உள்ளிட்ட வேறு களியாட்டங்கள் ஆகியவற்றை மேலும் சில காலத்துக்கு கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. சுகாதார அமைச்சினால் இத்தகைய சூழ்நிலையில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் 56 யோசனைகளைக் கொண்ட வழிகாட்டுதல் சகல பிரவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க அனைத்து துறைகளும் செயற்பட வேண்டியது அவசியம். சுகாதார வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சுகாதாரத்துறையினர் கடுமையான விசாரணைகளை முன்னெடுப்பர்.

மக்கள் காய்ச்சல் ஏற்படுமானால் அருகிலுள்ள பெரியாஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுமதிப்பது முக்கியம். நேற்று இனங்காணப்பட்ட வைரஸ் தொற்று நோயாளியும், அவ்வாறு பரிசோதனைகள் மூலமே இனங்காணப்பட்டுள்ளார். அனைத்து ஆஸ்பத்திரிகளுக்கும் அதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

தினமும் 10 பேருக்கு பி. சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நோய் தொடர்பாக ஆராயப்படுகிறது. அதற்கிணங்கவே நேற்றும் சமூகத்தில் ஒரு நோயாளி இனங்காணப்பட்டுள்ளார்.

மூன்று இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே நோயாளி உறுதி செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை கடுமையாக முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## சமூகத்தில் கொரோனா பரவுவதை...

400 பேர் பணி புரிந்த நிறுவனம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை அதனை அண்டிய ஏழு கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து எவரும் வெளியில் செல்லவோ, உட்பிரவேசிப்பதற்கோ தடைசெய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திரா சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க திவுலபிட்டிய, வெவகெதர, பெம்முன்ன, ஹொரகஸ்முல்ல, ஹபுவலான, ஹேன்பிட்டிகெதர மற்றும் கங்ஹின்முல்ல ஆகிய கிராமங்களே தனிமைப்படுத்தலுக்காக மூடக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

திவுலபிடிய மற்றும் மினுவங்கொடை பொலிஸ் பிரிவுகளில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஊரங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பெண்ணின் 16 வயது மகளுக்கு கொரோனா தொற்றியிருப்பது பீசீஆர் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர பயணம் செய்த பஸ் வண்டியில் பயணித்த 40 பேரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

திவுலபிட்டிய பகுதி பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,395 ஆக அதிகரித்துள்ளது.

மேற்படி பெண் சுகவீனம் காரணமாக கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்துள்ள நிலையில் அவர் குணமாகி வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் போது மேற்கொள்ளப்பட்ட பீ.சி. ஆர் பரிசோதனையின் போதே அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க கம்பஹா வைத்தியசாலையில் பணிபுரியும் 15 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளுக்கு விடுமுறை

இச் சம்பவத்தையடுத்து நேற்றுக் காலை கம்பஹா மாவட்டம் முழுவதுக்கும் பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டதுடன் அதனை அடுத்து நேற்று முற்பகல் நாடுமுழுவதிலுமுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9ம் திகதி 2ம் தவணைக்கான பாடசாலை விடுமுறைகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தபோதும், நேற்றைய தினம் திவுலப்பிட்டிய பிரதேசத்தில் கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலை ஏற்பட்டதால் பாடசாலைகளுக்கான விடுமுறை முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க இன்று 5ம் திகதி முதல் நாடளாவிய அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன் பிரிவேனாக்கள், தனியார் வகுப்புக்களுக்கும் விடுமுறை வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை திவுலபிட்டிய மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை அறிக்கை

மேற்படி பெண்மணி பணிபுரிந்த யக்காதுவயில் அமைந்துள்ள ப்ரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை நேற்றைய தினம் விசேட அறிவிப்பொன்றை விடுத்திருந்தது.

சுகாதார துறை அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பு கிடைத்தமையால் வைரஸ் தொற்றிய பெண்மணியை ஆரம்பக்கட்டத்திலேயே இனம் காண்பதற்கு முடிந்துள்ளது.

அதற்கிணங்க அந்தப் பெண்மணி தேசிய காய்ச்சல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க சம்பந்தப்பட் அதிகாரிகளின் பணிப்புரைகளுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் உச்சளவு ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொடர்ந்தும் செயற்படுவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த ஆடைத்தொழிற்சாலை தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் வைரஸை முழுமையாகக் கட்டுப்படுத்தும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் அந்நிறுவனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேற்படி வைரஸ் தொற்று நோயாளி இனங் காணப்பட்டதையடுத்து திவுலப்பிட்டிய பகுதியில் 180 பேரும் மற்றும் மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 250 பேருமாக 430 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் களனி பல்கலைக்கழகம்,நய்வல உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் மற்றும் யக்கலையிலுள்ள விக்ரமாரச்சிஆயுர்வேத நிறுவனம் ஆகியவற்றையும் மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதேவேளை மகர மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் கைதிகளை பார்வையிடுவதற்கான அனுமதி இன்று முதல் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை இன்றைய தினம் அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் பொது மக்களுக்கான சந்திப்பு நிகழ்வு இடம்பெறாது என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் பொது மக்கள் சந்திப்பு இடம் பெறுவது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த அமைச்சு நேற்று தெரிவித்தது.

கொரோனா தோற்று காரணமாக மார்ச் மாதம் முதல் தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டு கொரோனா பரவுவதை தடுக்க பல்வேறு முன்னெடுப்புகளை அரசாங்கம் மேற்கொண்டது.சமூகத்தில் இருந்து கொரோனா தொற்று பெருமளவு கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலே திவுலபிட்டிய பகுதியில் இருந்து நோயாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஏனைய பகுதிகளுக்கும் இது பரவாமல் தடுக்க அரசாங்கம் தேவையான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. (ஸ)

## நியூ டயமன் கப்பல்...

(03ஆம் பக்கத் தொடர்)

அதில் உள்ள எரிபொருட்களை வேறு கப்பலுக்கு மாற்றுவதற்கு கப்பல் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். இலங்கையின் கிழக்கு மாகாண கடற் பிராந்தியத்தில் தீ அனர்த்தத்துக்கு உள்ளான நியூ டயமன் கப்பல் தீயணைப்பு நடவடிக்கைகளுக்காகவும் எரிபொருள் கசிவு காரணமாக சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நட்ட ஈடாகவும் 442 மில்லியன் ரூபாவை அரசாங்கம் நட்ட ஈடாக கோரியிருந்தது. அதற்கிணங்க அந்த நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு மேற்படி கப்பல் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி கப்பலால் கடற் பிரதேசத்திற்கு மீண்டும் பாதிப்புகள் ஏற்படாது என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மேற்படி கப்பலை கொண்டு செல்வதற்கு கடற்படை அனுமதி வழங்கியதாக அவர் தெரிவித்தார்.(ஸ)

## பூர்த்தி செய்யப்படாத...

(03ஆம் பக்கத் தொடர்)

வீதிகள் காணப்படுவதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

ஏ மற்றும் பீ பிரிவுகளுக்கு உட்பட்ட வீதிகளும் கிராம மற்றும் தோட்டப்புறங்களிலுள்ள வீதிகளிலும் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உரிய வகையில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யாத ஒப்பந்தக்காரர்கள் தொடர்பிலான அறிக்கையொன்றை அமைச்சரிடம் வழங்கவுள்ளதாக பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஹெரோயினை சூட்சுமமாக...

(03ஆம் பக்கத் தொடர்)

விசாரணையை முன்னெடுத்த பின்னர் குறித்த இளைஞனின் வீட்டில் இருந்து தடை செய்யப்பட்ட மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது.

கல்முனை2 கடற்கரைப்பள்ளி வீதியை சேரந்த 29 வயதுடைய குறித்த இளைஞனிடம் இருந்து 10 மில்லிகிராம் மற்றும் மாவா தூள் 30 கிராம் என்பன கைப்பற்றப்பட்டு கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கைதான சந்தேக நபரை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வீதி ஒழுங்குவிதிகளை...

(03ஆம் பக்கத் தொடர்)

கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதோடு அபராதமும் விதிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## சம்மாந்துறை நீதிமன்றில்...

இன்சான் (வயது 42) சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் இன்று நடைபெறும்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்களும் நேற்று கருத்துத் தெரிவித்த வளர்ப்புத் தாயான நூறுல் இன்சான்,.... 2 தினங்களாக மாளிகைக்காடு கிராமத்தில் இருந்த எனது மகன் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) எனது வீட்டுக்கே வந்துள்ளார்.

ஆனால் அபுசாலி சித்தி கமாலியாவின் பிள்ளை சுனாமியின் போது காணாமல் போயிருக்கலாம். எனினும், எனது மகன் 2001 ஏப்ரல் 19யில் பிறந்த அமீர் மொகமட் சியான் என்பவரே. அவருக்கு தற்போது 19 வயது. இந்த சம்பவத்தினால் நான் நிலைகுலைந்து போயுள்ளேன் என தெரிவித்து தான் கர்ப்பிணியாய் இருக்கும் காலத்தில் பெறப்பட்ட வைத்திய பரிசோதனை அறிக்கைகளையும் பிறப்புப் பதிவையும் நேற்று ஊடகவியலாளர்களிடம் காண்பித்து அழுதார்.

அம்பாறை ஆஸ்பத்திரியில் சிற்றூழியராகப் பணியாற்றும் நூறுல் இன்சான் தான் கர்ப்பிணியாக இருக்கும் போதே எனது கணவர் என்னை விட்டு பிரிந்து வேறு திருமண பந்தத்தில் இணைந்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அபுசாலி சித்தி கமாலியா,... போலிப் பிறப்புப் பதிவைப் பெற்றுள்ள நூறுல் இன்சான் பிள்ளையைத் தனக்கு சொந்தமாக்க முயற்சி எடுக்கிறார் எனவும் தெரிவித்தார். எது எவ்வாறிருப்பினும் நீதிமன்ற விசாரணையிலேயே தீர்வு தங்கியுள்ளது.

## அபராதங்களுக்கு 10 மடங்கும்...

பிரசாரங்களை பரப்புகின்றன.அது தொடர்பாக பீடாதிபதிகளுக்கு உண்மை விபரங்களை தெளிவு படுத்தும் வகையில் பீடாதிபதிகளை சந்தித்ததாக தெரிவித்த அமைச்சர்,

சுற்றுச் சூழல் தொடர்பில் புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரிடம் பரிந்துரைக்கப்படும் என்றும் திருத்தப்பட்ட மசோதா விரைவில் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டு பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படவிருப்பதாகவும் தெரிவித்தார். அவை இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில், அரசியல்வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் தவறு செய்தபோது, சாதாரண மக்கள் பிடிபட்டு சிறிய குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டனர். இப்போது அதற்கு இடமில்லை. ஆனைவிழுந்தாவ பகுதியில் சேதமாக்கப்பட்ட 1 1/2 ஏக்கர் நிலத்தை புனரமைக்கவும், அப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

வணாத்திவில்லு சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான நிலத்தில் பல மரங்கள் வெட்டப்பட்டிருப்பதாகவும், அதற்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

## கொரோனா தொற்றின் தீவிரத்தை...

இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,395 ஆக அதிகரித்துள்ளது.

இதன் பின்னர் திவுலபிடிய மற்றும் மினுவாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசன எண்ணிக்கைக்கே அனுமதி...

அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சேவையில் உள்ள அனைத்து அரசாங்க மற்றும் தனியார் பஸ் வண்டிகளில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும் என்றும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்று அச்சம் குறைவடைந்ததைத் தொடர்ந்து, அதனை பெரிதளவில் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த நிலையில், உடன் அமுலுக்கு வரும் வரையில் இந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

## நீராடச் சென்ற மூன்று இளைஞர்கள்...

மூன்று பேர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பகுதியிலுள்ள நண்பர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு சென்றிருந்த நிலையில் இந்த அனர்ந்தம் நேர்ந்துள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே காணாமல் போனவர்களை தேடும்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## இன்று முதல் நாடளாவிய...

எதிர்வரும் 8ம் திகதியை தேசிய எதிர்ப்பு தினமாக முன்னெடுக்கவுள்ளதுடன் அன்றைய தினம் கொழும்பு ஹைட்பாக் திடலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை 20வது அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தும் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது தொடர்பான கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் 39 மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வரலாற்றில் சட்டமூலமொன்றுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அதிகூடிய மனுக்கள் இதுவென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போதும் ஆளும் தரப்பு எம்.பிக்கள் 30 பேர் மேற்படி அரசியலமைப்புத் திருத்தத்துக்கு எதிராக செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 64 இலங்கையர் கொரோனா...

உட்படுத்தப்பட்டு வருகின்றனர். மேற்படி நபர்கள் தொடர்பில் அந்தந்த நாடுகளிலுள்ள தூதுவராலயங்கள் செயற்பட்டு வருகின்றன. அதேவேளை கொரோனா தொற்றினால் மரணமடைகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதற்கிணங்க மரணமடைவோரின் உறவினர்கள் அந்த நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச செய்திகள்

## டிரம்ப்புக்கு எதிர்வரும் ஒருசில நாட்களும் ‘சோதனைக் காலம்’



கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், தற்போது நலமாக இருப்பதாகவும் எதிர்வரும் ஒருசில நாட்கள் சோதனைக் காலமாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது நாளை மருத்துவமனையில் கழித்து கொவிட்–19 தொற்றுக்கு சிகிச்சை பெற்று வரும் டிரம்ப், ட்விட்டரில் வீடியோ ஒன்றை பதிவிட்டுள்ளார்.

டிரம்பின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் ஆனால் அவர் இன்னும் நிலைமையில் இருந்து விடுபடவில்லை என்றும் ஜனாதிபதியின் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியின் உடல்நிலை குறித்து முரண்பாடான செய்திகள் வெளியாகி இருந்தன.

ஜனாதிபதியின் நிலை குறித்து மருத்துவக் குழு பொதுவான தகவல்களை வெளியிட்டிருந்த நிலையில் வெள்ளை மாளிகை தலைமை அதிகாரி மார்க் மீடோ, அவரது நிலை கவலைக்குறியது என்று குறிப்பிட்டிருந்தார்.

மீடோவின் கருத்துக் குறித்து ஜனாதிபதி அதிருப்தி அடைந்திருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

முதல் பெண்மணி மெலானியா டிரம்ப் உட்பட ஜனாதிபதியை சூழவிருக்கும் பலருக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பலரும் கடந்த வாரம் வெள்ளை மாளிகையில் நடந்த நெரிசல் மிக்க நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றவர்களாவர். இதனை ஒரு வேகமான நோய்ப் பரவல் நிகழ்வாக கருதி விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

புதிதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான பிரத்தியேக உதவியாளர் நிகொலஸ் லுனாவுக்கும் நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கும் அறிவிப்பை டொனால்ட் டிரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டார். அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனை எதிர்த்து டிரம்ப் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை நான்கு நிமிடங்கள் கொண்ட வீடியோ ஒன்றை பதிவிட்டிருக்கும் டிரம்ப், தமக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் மற்றும் தாதியருக்கு நன்றி தெரிவித்தார்.

“இங்கு வரும்போது நல்ல உடல்நிலையோடு இருப்பதாக நான் உணரவில்லை. ஆனால் இப்போது நலமாக இருக்கிறேன். அடுத்து ஒருசில நாட்கள் சோதனைக் காலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அடுத்த ஒருசில நாட்களில் என்ன நடக்கும் என்பதை பார்ப்போம்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வொசிங்டன் டி.சிக்கு அருகில் உள்ள இராணுவ மருத்துவமனை ஒன்றிலேயே டிரம்ப் சிகிச்சை பெற்று வருகிறார்.

மருத்துவமனையில் டிரம்புக்கு உடலில் கொரோனா நோய் பாதிப்பு அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில் ரெம்டெசிவிர் சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த மருந்துகளை அவரது உடல் ஏற்றுக் கொண்டதாக டிரம்பின் பிரத்தியேக மருத்துவர் ஷோன் கோன்லி தெரிவித்தார்.

ஜனாதிபதி டிரம்ப் மருத்துவமனையில் இருக்கும்போது துணை ஜனாதிபதி மைக் பென்சுக்கு ஜனாதிபதியின் அதிகாரம் வழங்கப்படாது என வெள்ளை மாளிகை தெரிவித்தது.

## இத்தாலி, பிரான்ஸில் வெள்ளம், சூறாவளி


### பலரைக் காணவில்லை



பிரான்ஸ், இத்தாலியில் பெய்த கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தில் இருவர் உயிரிழந்து மேலும் 24 பேர் காணாமல்போயுள்ளனர். வடகிழக்கு பிரான்ஸில் வீசிய சூறாவளி தொடர்ந்து வடக்கு இத்தாலியை தாக்கியதை அடுத்தே இரு நாட்டு எல்லைப் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டதோடு, வீடுகள் சேதமடைந்து பாலங்கள் உடைந்துள்ளன. இதனால் வீதிகள் தடைப்பட்டு மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

இத்தாலியில் மலைப்பிராந்தியம் ஒன்றில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட ஒருவரின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிட்டோன்ட் பிராந்தியத்தில் காணாமல்போயுள்ள 16 பேரை மீட்பாளர்கள் தேடி வருகின்றனர். பிரான்ஸ் மற்றும் இத்தாலிக்கு இடையிலான நெடுஞ்சாலையில் கார்களில் பயணித்துக் கொண்டிருந்தவர்களே பொரும்பாலும் காணாமல்போயுள்ளனர்.

## எகிப்தில் 'பிரமிட்' காலத்து சவப்பெட்டிகள் கண்டுபிடிப்பு



2500 ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட்ட அதிகம் பாதுகாக்கப்பட்ட வகையில் இருக்கும் 59 மூடப்பட்ட மரச்சவப்பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக எகிப்து அகழ்வாராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் அலங்கரிக்கப்பட்ட கற்சவப்பெட்டி ஒன்று திறக்கப்பட்டதோடு அதில் சவச்சீலையால் மூடப்பட்ட மம்மி ஒன்றும் இருந்தது.

யுனெஸ்கோ மரபுரிமைச் சொத்தாக உள்ள பண்டைய எகிப்துத் தலைநகரான நன்க்ரோபொலிஸின் பண்டைய சக்காரா அடக்கஸ்தலத்திலேயே இந்த சவப்பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மூன்று வாரங்களுக்கு முன்னர் இது போன்ற 13 சவப்பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலேயே அந்தப் பகுதியில் மேலும் 12 மீற்றர் ஆழத்தில் இந்த சவப்பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்னும் பல சவப்பெட்டிகள் இங்கு புதையுண்டு இருப்பதாக சுற்றுலா மற்றும் தொல்பொருள் அமைச்சர் காலித் அல் அனானி தெரிவித்துள்ளார். இந்த அடக்கஸ்தலத்திற்கு அருகிலேயே 4,700 ஆண்டுகள் பழமையான ட்ஜோசர் பிரமிட் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெயின் தலைநகரில் கடும் பொது முடக்கம்



ஐரோப்பாவில் இரண்டாவது அலை கொரோனா தொற்று தீவிரம் அடைந்து வரும் நிலையில் ஸ்பெயின் தலைநகர் மெட்ரிட்டில் மூன்று மில்லியனுக்கும் அதிகமானோர் மீது கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த வார இறுதி தொடக்கம் மக்கள் அத்தியாவசியப் பயணங்களுக்கு மாத்திரமே தமது வீடுகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுபானக் கடைகள் மற்றும் உணவு விடுதிகள் இரவு 10 மணியுடன் மூடப்படுவதோடு அதிகபட்சம் அறுவர் மாத்திரமே ஒன்றுகூட அனுமதிக்கப்படுகிறது.

ஸ்பெயின் மத்திய அரசே இந்தக் கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ளது. தலைநகரைச் சூழவிருக்கும் ஒன்பது சிறு நகரங்களிலும் இந்தக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

எனினும் மெட்ரிட் நகர நிர்வாகம் இந்தக் கட்டுப்பாடுகளை எதிர்த்துள்ளது. அதனை தடுக்க மெட்ரிட் நீதி அமைச்சு நீதிமன்றத்தை நாடியுள்ளது.

## ஜெனீவாவில் மணிக்கு 25 டொலர்கள் சம்பளம்



சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் ஒரு மணி நேரத்துக்குக் குறைந்தபட்ச சம்பளமாக 25 டொலரை நிர்ணயிக்க அந்நகர மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

அதுவே உலகின் மிக அதிகமான குறைந்தபட்ச சம்பளம் என்று கூறப்படுகிறது. அது தொடர்பில் நடந்த வாக்களிப்பில், சுமார் 58 வீதமான வாக்காளர்கள் அதற்குச் சாதகமாக வாக்களித்துள்ளனர்.

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து, மாநிலத்தின் சுமார் 6 வீதமான ஊழியர்கள் அந்தத் தொகையைச் சம்பளமாகப் பெறுவர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

ஜெனீவா உலகிலேயே 10ஆவது மிக விலை உயர்ந்த நகராகக் கருதப்படுகிறது.

அந்தப் புதிய ஊதியம், சுவிட்ஸர்லாந்து மக்களின் ஒரு பகுதியினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் விழாமல் தடுக்கும் என்று ஊழியர்கள் அமைப்பு ஒன்றின் தலைவர் குறிப்பிட்டார்.

## சூடானில் வரலாற்று முக்கிய அமைதி ஒப்பந்தம் கைச்சாத்து



கடந்த பல தசாப்தங்களாக நீடிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சூடான் அரசு மற்றும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையே அமைதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டு எட்டி இருக்கும் நிலையில் தென் சூடான் தலைநகர் ஜுபாவில் கடந்த சனிக்கிழமை இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு சாட், கட்டார், எகிப்து, ஆபிரிக்க ஒன்றியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை மத்தியஸ்தர்களாக இடம்பெற்றுள்ளன. எனினும் இரு பிரதான கிளர்ச்சிக் குழுக்கள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சூடானில் அரபு ஆதிக்கம் கொண்ட அரசுக்கும் அரபு அல்லாத இனக் குழுக்களுக்கும் இடையே பல தரப்பு மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உம்றா யாத்திரை மீண்டும் ஆரம்பம்



கொரோனா வைரஸுக்கு எதிரான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் உம்றா யாத்திரைக்கு சவூதி அரேபியா நேற்று முதல் அனுமதி அளித்தது.

இதன்படி யாத்திரிகர்கள் நேற்று மக்கா பெரிய பள்ளிவாசலில் புனித கஃபாவை சமூக இடைவெளியை பேணி வலம் வர ஆரம்பித்தனர்.

கொரோனா பரவலை அடுத்து சவூதி நிர்வாகம் கடந்த மார்ச் ஆரம்பத்தில் ஆண்டு முழுவதும் வழிபட முடியுமான உம்றா யாத்திரையை இடைநிறுத்தியது.

இந்நிலையில் நேற்று தொடக்கம் இந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான முதல் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக மக்கா பெரிய பள்ளிவாசலுக்குள் நாளொன்றுக்கு 6000 யாத்திரிகர்களுக்கு நுழைய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக சவூதி பிரஜைகள் மற்றும் அங்கு வசிப்பவர்களுக்கே அனுமதி அளிக்கப்படுவதோடு ஒவ்வொரு யாத்திரிகர்களும் மூன்று மணி நேரத்திற்குள் தமது வழிபாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

நாள்தோறும் புனித மக்கா பள்ளிவாசல் பலமுறை கிருமிநாசினி தெளித்து சுத்திகரிக்கப்படுகிறது. நீண்ட நாட்களுக்குப்பின் பள்ளிவாசலில் 5 வேளை தொழுகை நடத்தவும் நேற்று முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மக்கள் பள்ளிவாசலுக்கு தொழுகை நடத்தும் முன் ஒன் லைன் மூலம் விண்ணப்பம் செய்து, தங்களுக்கு உரிய நேரத்தில் அனுமதி பெற்று, சமூக விலகலைக் கடைப்பிடித்து தொழுகை, உம்றா செய்ய வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

எனினும் சவூதிக்கு வெளியில் உள்ள முஸ்லிம்கள் உம்றா யாத்திரைக்காக அனுமதிப்பது நவம்பர் 1 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக ஆரம்பத்திலேயே கடும் கட்டுப்பாடுகளை கொண்டுவந்தபோதும் சவூதியில் சுமார் 336,000 கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவானதோடு 4,850 பேர் உயிரிழந்துள்ளனர்.

## உலகில் அதிகம் சம்பாதிக்கும் சின்னத் திரை நடிகை வெர்கரா



‘மொடர்ன் பெமிலி’ தொலைக்காட்சித் தொடர் நடிகையான சொபியா வெர்கரா உலகில் அதிக சம்பளம் பெறும் நடிகையாக போர்பஸ் சஞ்சிகை பட்டியலிட்டுள்ளது.

தற்போது ‘அமெரிக்கா கொட் டெலன்ட்’ நிகழ்ச்சியின் நடுவராகவும் இருக்கும் வெர்கரா கடந்த 12 மாதங்களில் சம்பளம் மற்றும் ஒப்பந்தங்கள் மூலம் 43 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளார்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் முடிவடைந்த மொடர்ன் பெமிலி தொடரின் ஓர் அங்கத்திற்காக 48 வயதான வெர்கரா 500,000 டொலர்களை ஈட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் ஹொலிவுட் வெள்ளித்திரை ஸ்தம்பித்திருக்கும் நிலையில் சின்னத்திரை தொடர்களுக்கான வரவேற்று அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஒஸ்கார் விருது வென்ற அஞ்சலினா ஜோலி 35 மில்லியன் டொலர்களுடன் இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

## ஆர்மேனியா–அசர்பைஜான் படைகள் தொடர்ந்து மோதல்



ஆர்மேனியப் படைகள் இரண்டாவது மிகப்பெரிய நகரான கன்ஜா மீது பீரங்கித் தாக்குதல் நடத்தியதாக அசர்பைஜான் நேற்று தெரிவித்துள்ளது. கடந்த வாரம் இரு நாடுகளுக்கும் இடையில் வெடித்த மோதல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அசர்பைஜபான் மீது நேரடி தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்று ஆர்மேனியா குறிப்பிட்டபோதும் அசர்பைஜானுக்குள் இருக்கும் நகொர்னோ கரபக் பிராந்திய ஆர்மேனிய இனப் படையினர் கன்ஜான் நகரில் இராணுவத் தளம் ஒன்றை அழித்ததாக குறிப்பிட்டுள்ளது.

இந்த மோதல் முன்னாள் சோவிட் ஒன்றிய நாடுகள் இரண்டுக்கும் இடையில் முழுவீச்சியில் போர் வெடிக்கும் சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதில் அசர்பைஜான் ஆதரவு துருக்கி மற்றும் ஆர்மேனிய ஆதரவு ரஷ்யா நேரடியாக தலையிடவும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஒரு வாரமாக நீடிக்கும் மோதல்களில் இரு தரப்பிலும் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 17

### குறள் தரும் சிந்தனை



என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

## கொரோனா தொற்று நீங்கும் வரை விழிப்புணர்வை கைவிடலாகாது

இலங்கையில் கடந்த சில மாதங்களாக தணிந்திருந்த கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான அச்சம் நேற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. கம்பஹா மாவட்டத்தில் உள்ள யக்காதுவ பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தொழில் புரிந்த பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருப்பது நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே நாட்டில் கொரோனா தொற்று தொடர்பான அச்சம் மீண்டும் உருவாகியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த இப்பெண் சில நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். அப்பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவின்படி அவர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து உடனடியாகவே கொரோனா தொற்று பாதுகாப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள பெண்ணின் குடும்பத்தினர் மற்றும் அப்பெண்ணுடன் அண்மைய நாட்களாக நெருங்கிப் பழகியோர் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அப்பெண் தொழில் புரிந்த ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதுடன், அங்கு கடமையாற்றியவர்களும் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேசமயம் கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை, திவுலப்பிட்டி உட்பட ஏழு கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அக்கிராமத்தில் இருந்து மக்கள் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு உள்ளான இப்பெண்ணுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளதென்பதைக் கண்டுபிடிப்பதற்கான 'வழித்தடம்' அறியும் துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேசமயம் இப்பெண்ணில் இருந்து வேறு பலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கக் கூடுமென்ற சந்தேகத்தில் துரிதமான நடவடிக்கைகளில் அதிகாரிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர். கொரோனா வைரஸ் மேலும் பரவி, சமூகத் தொற்று ஏற்பட்டு விடுவதைத் தடுப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் யாவும் முடுக்கி விடப்பட்டுள்ளன. எனவே மக்கள் கொரோனா தொற்று தொடர்பான விழிப்புணர்வுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமே தவிர, வீணாக அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

கொரோனா தொற்றில் இருந்து விலகியிருப்பதாயின் விழிப்புணர்வும் பாதுகாப்பு நடைமுறைகளுமே முக்கியமே தவிர, அச்சப்படுவதால் பயனில்லை. அரசாங்கம் உடனடியாகவே முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதனால், அந்நடைமுறைகளை மக்கள் உரியபடி கடைப்பிடிப்பதே அவசியமானதாகும்.

இரண்டாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 9ம் திகதியுடன் மூடப்படவிருந்த அரசாங்கப் பாடசாலைகள் யாவும், அவசரமாக இன்று 5ம் திகதியுடன் மூடப்படுவதாக நேற்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. அதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் தனியார் ரியூசன் நிலையங்கள் மூடப்பட்டு விட்டன. நீர்கொழும்பில் உள்ள மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை அவர்களது உறவினர்கள் பார்வையிடச் செல்வதும் மறுஅறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழகம் மற்றும் யக்கல விக்கிரமராச்சி ஆயுர்வேத கல்வியகம் என்பனவும் நேற்று முதல் மூடப்பட்டுள்ளன. இவையெல்லாம் கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளாகும். நாட்டிலுள்ள பாலர் பாடசாலைகளையும் தற்காலிகமாக மூடி விடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் மார்ச் மாத நடுப் பகுதி காலத்தில் இலங்கையில் கொரோனா தொற்று தீவிர நிலைமையில் காணப்பட்ட போதிலும் சமூகத் தொற்று ஏற்படுகின்றபடியாக ஆபத்து நிலைமை ஏற்படவில்லை. அரசாங்கம் மேற்கொண்ட தீவிரமான நடவடிக்கைகளின் பயனாக எமது நாட்டில் கொரோனா பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் எமது நாட்டின் சமூகத்தில் கொரோனா தொற்றாளர்கள் எவருமே கண்டுபிடிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தோரில் மாத்திரமே கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டனர்.

உலக நாடுகளில் கொரோனாவைக் கட்டுப்படுத்திய பெருமைக்குரிய நாடாக இலங்கையை சர்வதேசமே பாராட்டியது. உலக சுகாதார நிறுவனமும் இலங்கையைப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. எமது நாட்டில் கொவிட்19 தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதற்கு அரசாங்கத்தின் வினைத்திறனான செயற்பாடுகளும், பொதுமக்களின் ஒத்துழைப்புமே காரணங்களாகும்.

ஆனால் தற்போது மீண்டும் கொரோனா தொற்று ஒரு பிரதேசத்தில் தலைதூக்கியுள்ளது. எனினும் இந்த ஆபத்தை எமது நாடு முழுமையாகவே கட்டுப்படுத்தி விடுமென்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. இலங்கையின் அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் செயற்பாடுகள் மீது மக்களுக்கு முழுமையான நம்பிக்கை உண்டு. அதேவேளை மக்களின் பூரணமான ஒத்துழைப்புக் கிடைக்கின்ற நாடாக இலங்கை உள்ளது. இவ்வருடத்தின் ஆரம்பத்தில் கொரோனா பாதுகாப்புக்காக நாம் எத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொண்டோமோ, அவற்றையெல்லாம் மீண்டும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டியதே தற்போது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# அரச ஊழியர்களுக்காக பொரளையில் 608 வீடுகளை உள்ளடக்கிய தொகுதி

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று திறந்துவைப்பு

அரசு ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட பொரளை, வனாத்தமுல்ல, ஓவல் வீவ் ரெசிடென்சி வீடமைப்புத் திட்டம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ







தலைமையின் கீழ் இன்று 5 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு திறந்து வைக்கப்படுகிறது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது, இந்த வீட்டுத் திட்டத்தை நிர்மாணிப்பதில் சுமார் 1 1/2 ஆண்டு தாமதம் ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த மாதங்களில் பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் அந்நிர்மாணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. அதன் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது.

அப்போதைய பாதுகாப்பு செயலாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த அரசு ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டம் 2014 நவம்பரில் தொடங்கப்பட்டது.

அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தின் நிர்மாணப் பணிகள் 2015 இல் இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் 2016 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் தொடங்கப்பட்டன. முந்தைய விற்பனை அடிப்படையில் தொடங்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தில் 608 வீடுகள் விற்பனை செய்யப்படும் தறுவாயில் உள்ளதென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பதில் பிரதி பணிப்பாளர் நாயகம் (சொத்து மற்றும் காணி முகாமைத்துவம்) ஈ.ஏ.சி. பிரியசாந்த தெரிவித்தார். முழு திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டுச் செலவு ரூ. 5500 மில்லியன் ஆகும்.

3 படுக்கையறைகள் கொண்ட 304 வீடுகளையும், 2 படுக்கையறைகளுடன் 304 வீடுகளையும் இந்த வீடமைப்புத் திட்டம் கொண்டுள்ளது. இவ்வீடமைப்பு அலகுகள் முறையே 680, 880 சதுர அடிகளைக் கொண்டுள்ளன. இந்த அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் 25 தளங்களைக் கொண்டுள்ளது. வாகன தரிப்பிடம், சிறுவர் பூங்கா, 2 உடற்பயிற்சி மத்திய ஸ்தானங்கள் கடைத் தொகுதி, நீச்சல் தடாகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

வனாத்ததமுல்லயில் அமைந்துள்ள பி.சரணமுத்து விளையாட்டரங்கம் இந்த வீடமைப்பு வளாகத்தின் அருகிலேயே அமைந்துள்ளது. 15 முதல் 20 ஆண்டுகளாக அரச சேவையில் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இந்த வீடுகளை விலைக்கு வாங்கியுள்ளார்கள் என்றும் அவர்கள் சலுகை அடிப்படையிலும் தவணைக் கட்டண முறையிலும் பெற்றுக் கொண்டதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பதில் பிரதி பணிப்பாளர் நாயகம் (சொத்து மற்றும் காணி முகாமைத்துவம்) ஈ.ஏ.சி.பிரியசாந்த தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவுகளை அகற்றுதல் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் ஹர்ஷன் டி சில்வா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர ஆகியோருடன் மேற்பார்வையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த வீடமைப்புத் திட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

நகர்ப்புற வீடமைப்பு பிரச்சினை இப்போது இலங்கையில் ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. மேலும் கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் நிலவும் காணிப் பற்றாக்குறை, அதிக விலை ஆகியவை அதனை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

ஆனால் அரச மற்றும் தனியார் துறைகளிலும், உற்பத்தித் துறையிலும் வேலை வாய்ப்புகள் கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் சிதறிக் கிடக்கின்றன. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கருத்தில் கொள்ளும் போது இது இன்னும் தெளிவாகிறது.

அதற்கமைய, கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வீட்டு வசதிக்கான அதிக தேவை மற்றும் வரையறுக்கப்பட்ட நில பயன்பாட்டு முறை ஆகியவை இந்த கோரிக்கைக்கு ஏற்ப வீடுகளை வழங்குவதில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தொலைதூரப் பகுதிகளிலிருந்து மற்றும் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்தவர்கள் தினசரி நகர்ப்புறங்களுக்கு வருகிறார்கள் என்பது தெளிவாகிறது.

எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த நிலைமையை அடையாளம் கண்டுள்ளது. அதன் முதல் கட்டமாக கொழும்பு போன்ற பெரு நகரங்களில் முறைசாரா குடியேற்றங்களை புனரமைப்பதற்கும், அவர்களுக்கு முழுமையான, வசதியான குடியிருப்புகளை வழங்குவதற்கும் 2010 இல் ஒரு திட்டத்தை ஆரம்பித்தது. அதன் மூலம் பயன்படுத்தப்படாத நிலம் உகந்த நகர்ப்புற வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை கொள்கைக்கிணங்க தற்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வீடமைப்புத் திட்டத்தின் விரிவாக்கமாக கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும், நாட்டின் பிற நகர்ப் புறங்களிலும் மத்தியதர மக்களுக்கு மலிவு விலையில் வீடமைப்புத் திட்டங்களை வழங்குவதற்கும் நாட்டின் ஒட்டுமொத்த அமைப்பை மாற்றுவதற்கும், இலங்கையில் நகர்ப்புற மையங்களுக்கு முதலீட்டை ஈர்ப்பதற்கும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

அதன் ஆரம்ப செயற்பாடாக பொரளை அரசு ஊழியர்கள் வீடமைப்புத் தொகுதிக்காக ஒக்டோபர் 30, 2014 அன்று அடிக்கல் நடப்பட்டது. இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக 2016 ஆம் ஆண்டில் மீண்டும் செயல்படத் தொடங்கிய இந்தத் திட்டம் இப்போது அதன்இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

15 ஆண்டுகளுக்கும் மேலாக அரச துறைக்கு பங்களிப்பு செய்து வரும் அரசு ஊழியர்களுக்கு இங்கு வீடுகள் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 3 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தில் 25 மாடிகள் மற்றும் 608 வீட்டு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 304 இரண்டு படுக்கையறைகள் மற்றும் 304 மூன்று படுக்கையறைகள் கொண்ட வீட்டு அலகுகள் உள்ளன. முக்கிய ஒப்பந்த நிறுவனம் எக்சஸ் பொறியியல் நிறுவனமாக செயற்படுகின்றது.

அதன்படி, சுபீட்சத்தின் நோக்கு என்ற அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தத் தேவையான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அரசின் வழிகாட்டலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் இனங்காணப்பட்ட காணிகளை நோக்கமாகக் கொண்டு மேலும் 5000 வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

**டபிள்யூ.கே.பிரசாத் மஞ்சு...**
**(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)**

# ஹத்ராஸ் கிராமத்து பெண்ணுக்கு நீதி கோரி கனிமொழி தலைமையில் இன்று ஊர்வலம்

## பாலியல் வன்கொடுமையின் பின்னர் சித்திரவதை செய்யப்பட்டு கொலை

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலுள்ள ஹத்ராஸ் என்ற இடத்தில் பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த வழக்கில் நீதி கோரி ஆளுநர் மாளிகை நோக்கி தி.மு.க இன்று பேரணி நடத்துகிறது. தி.மு.க மகளிரணிச் செயலாளர் கனிமொழி தலைமையில் கைகளில் ஒளியேந்தி இந்தப் பேரணி நடைபெறும் என தி.மு.க தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் ஹாத்ராஸில் இளம்பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான கொடூரத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து அரசியல் நிகழ்வுகள் மாபெரும் கொடூரங்களாக நடக்கின்றன. சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத்தின் ஆட்சி, மக்களின் ஆட்சி என்பது மறைந்து அராஜகத்தின் ஆட்சி, சர்வாதிகாரத்தின் ஆட்சி, எதேச்சதிகாரத்தின் ஆட்சிதான் உத்தரப் பிரதேச மாநிலத்தில் நடக்கிறது என்பதையே அங்கிருந்து வரும் செய்திகள் உணர்த்துகின்றன என்று தி.மு.க தெரிவித்துள்ளது.

ஒரு பெண், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, உயிர் போகும் அளவுக்குச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். தன்னை குதறியவர்கள் யார் என்பதையும் அப்பெண் மரணவாக்குமூலமாகக் கொடுத்து விட்டு மரணம் அடைந்துள்ளார். இந்தச் சூழலில் அப்பெண்ணின் குடும்பத்துக்கு ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும் இருந்திருக்க வேண்டிய உத்தர பிரதேச பா.ஜ.க அரசு, எதிர்மறையாக நடந்து கொண்டுள்ளது. அப்பெண்ணின் உடல், அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவில்லை. அவரது பெற்றோருக்குத் தெரியாமல் அவசர அவசரமாக உடல் எரியூட்டப்பட்டுள்ளது.



உயிரிழந்த பெண்



இக்கொடுமை உ.பி எல்லையைத் தாண்டி இந்தியா முழுவதும் ஏராளமான கோபத்தையும் கொந்தளிப்பையும் கிளப்பி உள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லச் சென்ற அகில இந்திய காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல்காந்தியையும், பிரியங்கா காந்தியையும் அனுமதிக்காமல் உ.பி பொலிசார் தடுத்துள்ளார்கள். அதைவிட அராஜகமாக, ராகுல்காந்தியின் நெஞ்சைப் பிடித்து ஒரு பொலிஸ் அதிகாரி தள்ளுகிறார். அவர் விழுகின்ற காட்சி, இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கே இழுக்கு ஆகும்.

பொதுவாகவே சிறுபான்மையினர், பெண்கள், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் பாதுகாப்பு என்பது உத்தரப் பிரதேச மாநிலத்தில் கேள்விக்குறியாகி வருகிறது. ஊடகங்களும் பாதுகாப்பின்மையை உணர்கின்றன. இதனைச் சரி செய்து, அனைவர் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது. இதனை வலியுறுத்தி தமிழக ஆளுநர் மாளிகையை நோக்கிய பேரணி நடத்தத் திட்டமிட்டுள்ளதாக திராவிட முன்னேற்றக் கழக மகளிரணி தெரிவித்துள்ளது.

அநியாயமாகக் கொல்லப்பட்ட பெண்ணுக்கு நீதி கேட்டு, கழக மகளிரணிச் செயலாளர் கனிமொழி தலைமையில் ஒளியேந்தி அணிவகுக்க இருக்கிறது மகளிரணி. இன்று மாலை (ஒக்டோபர் 5) ஐந்து மணியளவில் ஆளுநர் மாளிகையைப் பேரணியாக அணிவகுக்க இருக்கிறார்கள் தி.மு.க மகளிரணியினர். அனைவரும் திரளாகக் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் இன்று கனிமொழி தெரிவித்துள்ளார்.

# 'யாவருக்கும் வசதியான வீடு: மகிழ்ச்சி நிறைந்த நகரம்'

**2020 உலக குடியிருப்பு தினத்தைக் கொண்டாடும் வைபவம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவுடனும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழும், கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை, கட்டடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் அழைப்பின் பேரிலும் ஒக்டோபர் 05 ஆம் திகதியான இன்று பி.ப. 02.00 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறுகிறது.**

கடந்த 33 வருட காலமாக வீடமைப்பு மற்றும் குடியிருப்புத் துறை சம்பந்தமான பல்வேறு தலைப்புகளின் கீழ் உலகக் குடியிருப்புத் தின நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் விசேடமான தொனிப் பொருள் ஒன்றின் கீழ் உலகக் குடியிருப்புத் தினம் கொண்டாடப்படுவதுடன், இம்முறை தொனிப் பொருளாக இருப்பது 'யாவருக்கும் வசதியானதொரு வீடு – மகிழ்ச்சி நிறைந்த நகரம்' என்பதாகும்.

உலகக் குடியிருப்புத் தினத்தை உலகம் முழுவதிலும் அமுல்படுத்துகின்ற ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கையின் முகவராண்மை நிறுவனமாக வீடமைப்பு விடயப் பொறுப்பு அமைச்சு காணப்படுகிறது. அதற்கமைய அந்த அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் வீடமைப்பு, குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பில் இணைந்து செயற்படுகின்ற ஏனைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் வேறு அமைப்புக்களின் உதவியுடன் உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், சிறுவர் நிகழ்ச்சித் திட்டங்கள், சித்திரம், நாடகம், கட்டுரைப் போட்டிகள், சித்திரக் கண்காட்சி,

நிலைபேறான குடியிருப்பு அபிவிருத்தியை பிரபல்யப்படுத்தல், உரித்து உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல், நகர வீடமைப்புத் திட்டங்களை புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள்,

குடியிருப்புத் தின தொனிப்பொருள் தொடர்பிலான விரிவுரைகள், கண்காட்சிகள், செயலமர்வுகளை நடத்துதல் மற்றும் முதல் நாள் உறை, நினைவு முத்திரைகள், கொடிகளை வடிவமைத்தல், செயலமர்வுகளை நடத்துதல், குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை புனரமைப்புச் செய்தல், அவற்றில் வசிப்பவர்களுக்கான செயலமர்வுகளை நடத்துதல், தொழில் முயற்சிசார் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல், இளம் சமுதாயத்தினருக்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல், தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தல் என்பனவாகும்.



உலகக் குடியிருப்பு தினம் பிரகடனம் செய்யப்பட்டு உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுவதன் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

வீடமைப்பு மற்றும் குடியிருப்பு மயமாக்கல், அது சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பில் சகல தரப்பினரினதும் கவனத்தைக் கோரல் (சமுதாயம், அலுவலர்கள், கல்விமான்கள், அரசியல் தலைமைத்துவம், பாடசாலை சிறுவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளடங்கலாக சமூகத்தின் சகல குழுக்களும்)

மேலும் சமூகத்தின் ஒவ்வொரு குழுவுக்கும், ஒவ்வொரு ஆளுக்கும் இதற்குள்ள பொறுப்புகள் தொடர்பில் நினைவூட்டல் மற்றும் பெற்றுக் கொடுக்கக் கூடிய பங்களிப்புப் பற்றி மீண்டும் சிந்திக்கத் தூண்டுதல்.

உலகக் குடியிருப்புத் தின தேசிய வைபவம் இன்று 5 ஆம் திகதி நடைபெறுவதை முன்னிட்டு தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. இவற்றில் சில பின்வருமாறு:

'உங்களுக்கு வீடு, நாட்டுக்கு எதிர்காலம்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகள் உட்பட ஏனைய நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை மக்களிடம் கையளித்தல் (நாடு முழுவதும்), மேற்படி ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள், சமுதாயப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், நிர்மாணக் கலைஞர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

உலகக் குடியிருப்பு தினமானது ஒரு தினத்திற்கு, ஒரு வாரத்திற்கு அல்லது மாதத்திற்கு மட்டுப்படுத்தப்பட மாட்டாது. 'யாவருக்கும் வசதியாதொரு வீடு –மகிழ்ச்சி நிறைந்த நகரம்' எனும் தொனிப் பொருளை யதார்த்தமாக்குதல் மற்றும் சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கையை அமுல்படுத்தி அதன் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு,நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகிய அமைச்சக்கள் இயங்கி வருவதன் காரணமாக மேற்படி அமைச்சுக்களின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களும் ஒன்றிணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துகின்றன.





## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இன்று 2020– உலக குடியிருப்பு தினக் கொண்டாட்டம்

நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட புதிய வீடுகளை ஆரம்பித்தல் (நாடு முழுவதும்), உரித்து உறுதிகளைக் கையளித்தல், உலகக் குடியிருப்புத் தினத் தொனிப்பொருளுக்கமைய சிறுவர் நிகழ்ச்சித் திட்டங்களை (முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் சித்திரப் போட்டி) நடத்தல், யக்கல வெரல்லவத்த நடுத்தர வகுப்பைச் சேர்ந்த தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பித்தல், இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ள வீடுகளை மக்களிடம் கையளித்தல், விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், விரிவுரைகள், செயலமர்வுகள், பெறுபேறை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்ந்தும் பாரிய செயற்பணி ஆற்றி வருகின்றன.

மேலும் வீடமைப்பு நிர்மாணிப்புடன் சம்பந்தப்படுகின்ற சகல அமைச்சுகளும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டமைப்பு சார் மாற்றத்தினூடாக மேற்படி நிறுவனங்களுக்கிடையே நல்லதொரு ஒருங்கிணைப்பைப் பேணி பொதுவானதொரு தகவுத்திறனின் கீழ் துரித நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் போது ஏனைய சகல நிறுவனங்கள் மற்றும் சமுதாயத்தினரினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு 'யாவருக்கும் வசதியானதொரு வீடு – மகிழ்ச்சி நிறைந்த நகரம்' எனும் தொனிப் பொருளை யதார்த்தமாக்கிக் கொள்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

# அரசு பதவியேற்ற குறுகிய காலப் பகுதிக்குள் நாடெங்கும் ஏராளமான வீட்டுத் திட்டங்கள்

**உலக குடியிருப்பு தினம் 1985 இல் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறுவப்பட்டது. இத்தினம் முதலில் 1986 இல் கொண்டாடப்பட்டது. மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச பிரதம மந்திரியாகவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகவும் இருந்த காலத்தில் ஐ.நாவில் முன்மொழிந்து சகல நாடுகளின் ஆதரவையும் பெற்று இந்த அமைப்பினை உருவாக்கினார். உலக குடியிருப்பு தலைமையகம் நைரோபியில் உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையில் உலக குடியிருப்பு தினம் கொண்டாடப்படுகின்றது.**

மனித வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற வீடுகளில் வாழ்கின்ற மக்களின் வீட்டுத் தேவையையும் அதனோடு தொடர்புடைய சுற்றாடல் பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு அவற்றை தீர்த்து வைப்பதற்கான தொரு சந்தர்ப்பத்தை வழங்குவதே உலக குடியிருப்பு தினத்தின் அடிப்படை நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரங்களின்படி இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வருகின்ற அநேகமான நாடுகளில் இன்று உலக மக்கள் தொகையில் நான்கிலொரு பங்கினர் நிலையான சொந்த வீடுகளில் வாழ்கின்றனர். ஏனையோர் வாடகை வீடுகள், குடிசை வீடுகள், சேரி வீடுகள், பஸ் நிலையங்கள், கடலோரங்கள்,லயன் அறைகள், தற்காலிக கூடாராங்கள் போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

நகர்ப்புறங்களில் இப்பிரச்சினையானது மிகவும் உக்கிரமடைந்துள்ளது.வறுமை,போதியளவு வீடுகள் இல்லாமை, அடிப்படை வசதிகள் இல்லாமை மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளால் இந்த மக்கள் பாதிப்படைந்துள்ளனர். தற்பொழுது கொழும்பு நகரத்தில் 56 வீதமானவர்கள் வீட்டுரிமையற்றவர்களாக வாழ்கின்றனர். 2025ஆம் ஆண்டில் உலக சனத்தொகையில் 55 வீதமானோர் நகரங்களிலேயே வாழ்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் இந்தத் தொகை 2030 ஆம் வருடமளவில் 65 வீதமாக அதிகரிக்கவிடமுண்டு. கொழும்பில் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கென சொந்தமாக வீடற்ற மக்களாக வாழ்ந்து வருகின்றனர். கொழும்பில் தற்போதைய நிலையில் ஒரு பேர்ச் காணி 50 இலட்சம் ரூபாவையும் தாண்டியுள்ளது. தொடர்மாடி வீடுகளின் விலையும் அதிகம். அன்றாடம் உழைத்து வாழ்க்கையை கொண்டு செல்லும் மக்களால் இவ்வாறான பாரிய தொகையை செலுத்தி வீட்டைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.





## வீடமைப்புக்கான குறைந்த வட்டியிலான கடன் ரூபா 56 இலட்சமாக அதிகரிப்பு

வங்கிகளிலும் இப்பாரிய தொகையை கடனாக பெறுவதென்றால் வருமானம் அதிகமாக இருத்தல் வேண்டும்.

இந்நிலையில் இலங்கையில் 35வது ஆண்டு உலக குடியிருப்பு தினத்தை வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.கம்பஹா மாவட்டத்தில் ஜக்கல விரலவத்தை பிரதேசத்தில் 300 தொடர்மாடி வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டம் உலக குடியிருப்பு தினமான இன்று ஆரம்பிக்கப்படுகின்றது. இந்நிகழ்வுக்கு வீடமைப்பு நிர்மாணத்துறை இராஜங்க அமைச்சர் இந்திக்க அநுரத்த தலைமை தாங்குகிறார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

அத்துடன் நாட்டில் சகல பகுதிகளிலும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடுகளைப் பெற்றுக் கொண்ட 1500 குடும்பங்களுக்கான வீட்டுரிமைப் பத்திரங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் அலரிமாளிகையில் வைத்து வழங்கி வைக்கப்படுகின்றது. அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபை, மனித குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு புதிய தொடர்மாடி திட்டங்கள் கொழும்பில் நிர்மாணிக்கப்படுகின்றன. நகரங்களில் தொடர்மாடி வீடுகளில் வாழ்கின்ற பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரை, சித்திரம் வரைதல் போட்டிகள் மற்றும் தொடர்மாடி வீடுகளில் வாழும் குடும்பங்களுக்கான சுயதொழில் முயற்சிகள் போன்ற நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கேற்ப வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுடன் இணைந்து இளைஞர்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்றும் முதன் முதலாக கம்பஹா மாவட்டத்தில் உலக குடியிருப்பு தினத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனால் இளைஞர்,யுவதிகள் எதிர்காலத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொள்பவர்கள் தமக்கென ஒரு வீட்டை பெற சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. இளைஞர்கள் தமது மாதாந்த வருமானத்தில் குறைந்த 6.5 வட்டி வீதத்தில் பணம் செலுத்தி தொடர்மாடி வீடுகளைப் பெற்றுக் கொள்ள இத்திட்டம் வழிவகுக்கிறது.

வீடமைப்பு நிர்மாணத்துறை நகர அபிவிருத்தி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ வீடமைப்பு அமைச்சினைப் பொறுப்பேற்று குறுகிய 6 மாத காலத்துக்குள் நாடெங்கிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 24 மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு வீடு என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். அதன் கீழ் 335 வீடுகள் வறிய சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஜனவரி மாதம் குருநாகலில் வைத்து பிரதமரால் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஒரு வீட்டை நிர்மாணிக்கவென வீடமைப்பு மானியமாக 6 இலட்சம் ருபா வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டது.

இதனை விட கொழும்பு மாவட்டத்தில் சேரிப்புற வீடுகள், சட்டவிரோத வீடுகள் மற்றும் கட்டடங்களை அகற்றி அவர்களுக்கு தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்து அவர்களை அம்மாடி வீடுகளில் அதிகாரசபை குடியேற்றி வருகின்றது . இதனால் இம்மக்களது வாழ்க்கைத் தரம் முன்னேறியுள்ளது. அவர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை, பழக்கவழக்கங்களை மாற்றியமைத்து புதியதொரு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர். இம்மக்களுக்கு தொடர்மாடி வீடுகளில் எவ்வாறு வாழ்வது, சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வது, முறையாக பேணுவது,கட்டடங்களை எவ்வாறு பராமரிப்பது போன்ற பல்வேறு பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நகர அபிவிருத்தி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்த காலத்தில் கொழும்பினை அழகுபடுத்தல் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கொழும்பில் கொம்பனி வீதி, மட்டக்குளி, பொரளை, மாளிகாவத்தை, பேலியகொட, தெமட்டகொட போன்ற பிரதேசங்களில் உயர்ந்த தொடர்மாடிகள் பல நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மின்உயர்த்தி, வாகன தரிப்பிடம், ம வழிபாட்டு இடங்கள், கடைத் தொகுதிகள், பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனை விட மத்திய தர வர்க்கத்தினருக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அடுத்த 3 ஆண்டுகளுக்குள் தொடர்மாடி வீட்டுத் திட்டங்களை கொழும்பில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கையின் பேரில் நாட்டில் உள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் 100 வீடுகள் கொண்ட மாதிரிக் கிராமங்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன.'உமக்கு ஒரு வீடு, நாட்டுக்குச் சேவை' எனும் திட்டத்தினை பிரதமர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இவை தவிர இந்திய அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்களான மாதிரிக் கிராமங்கள் அமைக்கும் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்காக தோட்டங்களில் 6 பேர்ச் காணியை வழங்கி அதில் தனி வீடுகள் நிர்மாணிக்கும் திட்டம், ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி மட்டக்களப்பு, வடக்கு மாகாணங்களில் உள்ள சகல மாவட்டங்களில் யுத்தத்தினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கான வீடமைப்புக் கிராமங்களும் நிர்மாணிக்கப்படும். இதற்கான நிதியை இந்திய அரசாங்கம் கடந்த 8 வருடங்களாக வழங்கி வருகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் வீடமைப்புக் கடனாக ரூபா 2 அல்லது 3 இலட்சமே வழங்கி வந்தது. அக்கடனை ரூபா 56 இலட்சமாக தற்போதைய அரசு அதிகரித்துள்ளது.

**அஷ்ரப் ஏ சமத்...**

# நவராத்திரி

புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசையை அடுத்த பிரதமை முதல் 9 நாட்களுக்கு செய்யப்படும் நவராத்திரி எனப்படும் தேவிவழிபாடு மிகச்சிறப்பானது. இதில் 3 நாட்களில் ஆதிபராசக்தியை துர்க்கையாகவும், அடுத்த 3 நாட்களுக்கு லட்சுமியாகவும், அதற்கடுத்த 3 நாட்கள் சரஸ்வதியாகவும் வழிபடுகிறார்கள்.

விரதமுறை: நவராத்திரியின் முதல் மூன்று நாட்கள் அம்பிகைக்கு உரியவை. முதல்நாளில், அவளை சாமுண்டியாகக் கருதி வழிபட வேண்டும். முண்டன் என்னும் அசுரனை சம்ஹரித்ததால் இவளை, சாமுண்டா என்றும் அழைப்பர். இவள் நீதியை காக்க கோபமாக இருக்கிறாள். இவளுக்கு சர்க்கரைப் பொங்கல் படைக்க வேண்டும். இரண்டாம் நாள் அம்பிகையை வாராஹியாக வழிபடவேண்டும். இவளுக்கு தயிர்ச்சாதம் படைத்து வணங்க வேண்டும். மூன்றாம் நாள் அம்பிகையை இந்திராணியாக வணங்க வேண்டும். அரச பதவிகள், அரசு பதவிகள் அனைத்தும் இவள் அருளாலேயே கிடைக்கும். இவளுக்கு எலுமிச்சை சாதம் படைக்க வேண்டும். நான்காம் நாள் அம்பிகையை வைஷ்ணவியாக கருதி வழிபட வேண்டும். இவளை விஷ்ணு சக்தி என்பர். இவளுக்கு கல்கண்டு சாதம் படைக்க வேண்டும்.



ஐந்தாம் நாள் அம்பாளை திரிசூலம், பிறைசந்திரன், பாம்பு ஆகியவை தரித்து, ரிஷப வாகனத்தில் எழுந்தருளும் மகேஸ்வரியாக அலங்கரிக்க வேண்டும். இவளை மஹதீ என்றும் அழைப்பர். சர்வமங்களம் தரும் இவள் தர்மத்தின் திருவுருவமானவள். உழவர்கள், உடலுழைப்பு கொண்டவர்கள், அலுவலகங்களில் பணி செய்பவர்களுக்கு கேட்கும் வரத்தைத் தருபவள். இவளுக்கு பால் பாயசம் படைக்க வேண்டும். ஆறாம் நாள் நாள் அம்பாளை மயில் வாகனத்துடன், சேவல் கொடியுடன் அலங்கரிக்க வேண்டும். இவளை கவுமாரி என்பர். இவள் தைரியத்தை அருளுபவள். பாவங்களைப் போக்குபவள். குமார கண நாதம்பா என்றும் இவளை அழைப்பர். இவளுக்கு சித்ரான்னம் படைக்க வேண்டும். ஏழாம் நாளில் இருந்து அம்பிகையை கல்வி தெய்வமாக கருதி வழிபட வேண்டும். இதன் முதல் கட்டமாக அவளை வித்யாலட்சுமியாக அலங்கரிக்க வேண்டும். தாமரையை ஆசனமாகக் கொண்டு, தாமரை மலரேந்தி, யானைகளை இருபுறமும் நிறுத்த வேண்டும். இவளது கையில் ஜெபமாலை, கோடரி, கதை, அம்பு, வஜ்ராயுதம், தாமரை, வில், கமண்டலம், தண்டாயுதம், சூலம், கத்தி, கேடயம், சங்கு, சக்கரம், மணி, அமுதகலசம், பாசம், சூலம் ஆகியவை இருக்க வேண்டும்.

இவளுக்கு பால் அன்னம் நிவேதனம் வைக்க வேண்டும். எட்டாம் நாளில் அம்பிகையை பிராஹ்மியாக அலங்கரிக்க வேண்டும். இவள் சரஸ்வதி வடிவம் தாங்கியவள். அன்ன வாகனம் அமைத்து, அதில் தர்ப்பைப் புல்லைப் பரப்பி, வெள்ளைத் தாமரை மேடை அமைத்து, அதில் சரஸ்வதியாக அம்பிகையை அலங்கரித்து அமர்த்த வேண்டும். வீணை இருக்கக்கூடாது. கையில் ஏடும், நெற்றியில் கண்ணும் இருக்க வேண்டும். விரல்களை சூசி ஹஸ்தம் என்னும் நிலையில் வைக்க வேண்டும்.

அதாவது ஆள்காட்டி விரல் மட்டும் விரிந்திருக்க மற்ற விரல்கள் மடங்கியிருக்க வேண்டும். இவ்வுலகம் பொய்யானது, அவ்வுலகம் என்ற ஒன்று மட்டுமே நிரந்தரமானது என்ற ஞானத்தை இந்த முத்திரை பக்தர்களுக்கு உணர்த்தும். அம்பாளை வெள்ளைத் தாமரையில் அமர வைத்து, வீணை, ஏடு, ஜபமாலையுடன் சரஸ்வதியாக அலங்கரிக்க வேண்டும். இந்நாளில் அம்பிகையை நரசிம்ஹியாகவும் அலங்கரிப்பதுண்டு.

சைவ மஞ்சரி

## அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்



**16981) பல்வேறு தெய்வங்களை வழிபட்டு வந்தாலும் அந்த தெய்வங்களில் மிகவும் வலிமையானதாக இருப்பது எந்த தெய்வம்?**
அவர்களது குலதெய்வம் மட்டுமே.

**16982) அதற்குக் காரணம் என்ன?** பாரம்பரியமாக அதற்கு முன்னோர்கள் வழிபாடுகளை செய்து வந்துள்ளதால்

**16983) குலதெய்வம் எவ்வாறு போற்றப்படுகிறது?**
குலம் காக்கும் தெய்வமாக போற்றப்படுகிறது.

**16984) தனது அருளை மட்டுமல்லாது, மற்ற தெய்வ வழிபாடுகளின் பலன்களையும் அளிக்கும் சக்தி எந்த தெய்வத்திற்கு உண்டு?** குலதெய்வத்திற்கு மட்டுமே உண்டு.

**16985) இவ்வாறு யார் என்று குறிப்பிடுகின்றனர்?** சான்றோர்கள்

**16986) 'நாள் செய்யாததை கோள் செய்யும்' என்றும், 'கோள் செய்யாததை எது செய்யும்' என்றும் சொல்வார்கள்?** குலதெய்வம்

**16987) குலதெய்வம் குறித்த ஆன்மிக ரகசியம் என்ன?**
ஒரு குடும்பத்தின் முன்னோர்களில் தெய்வமாக மாறிய புண்ணிய ஆன்மாக்கள், சம்பந்தப்பட்ட குலத்தை சார்ந்தவர்களைக் காக்கும் வல்லமை பெற்றவை என்பது.

**16988) குலதெய்வத்திற்குரிய சிறப்பு சக்தி என்ன?**
அவை, ஒருவரது பூர்வ கர்ம வினைகளையும் கூட அகற்றி விடும் சக்தி பெற்றவை.

**16989) குல தெய்வங்கள் தெரியாதவர்கள் எந்த தெய்வத்தை வழிபடலாம்?**
எந்த தெய்வத்தையும், எந்த ஆலயத்திலும் சென்று வழிபட்டுக் கொள்ளலாம்.

**16990) அதில் ஏதாவது சிறப்பு உண்டா?**
ஆனால் அதன் மூலம் பூர்வ ஜென்ம கர்மாக்களின் தாக்கத்தை ஓரளவுக்குதான் நிவர்த்தி செய்ய முடியும். அதுவே குலதெய்வ வழிபாடு என்றால், நம்முடைய கர்மாக்கள் முற்றிலும் நிவர்த்தியாகிவிடும் என்பதுதான் அதன் சிறப்பு அம்சம்.

**16991) தங்கள் வீட்டுத் தெய்வமாக வழிபடுவது தமிழர் கிராமிய பண்பாடாக இன்றும் உள்ளது எது?**
பொதுவாக, குறிப்பிட்ட ஒரு பரம்பரையில் வழிகாட்டியாய் வாழ்ந்து, மறைந்த முன்னோர்கள் அல்லது கன்னியாக இருந்து மறைந்த பெண்களை

**16992) பெரும்பாலும், பெண் வடிவமாகவே இருக்கும் இவர்களை எவ்வாறு அழைப்பர்?**
வீட்டுச் சாமி, குடும்பத் தெய்வம், கன்னித் தெய்வம், குல சாமி

**16993) அந்த நிலையில் குலதெய்வம் என்பது எவ்வாறு இருக்கும் என கருதப்படுகிறது?**
ஒருவரது நலன்களில் அக்கறை காட்டும் இறை சக்தியாக இருந்து வருகிறது.

**16994) குலதெய்வ தோஷம் இருந்தால், மற்ற தெய்வங்களின் அருள் கிடைக்குமா?** கிடைக்காது.

**16995) குல தெய்வத்தின் அனுக்கிரகம் இல்லை என்றால், ஒருவர் எவ்வளவு சக்தி வாய்ந்த ஹோமம் அல்லது யாகம் செய்தாலும், ஆலயங்களுக்கு சென்றாலும் எதிர்பார்த்த பலனை பெற முடியுமா?** முடியாது.

**16996) ஆன்மிக ரீதியாக ஒரு குடும்பத்துக்கு எத்தனை தெய்வ அம்சங்கள் பாதுகாப்பாக இருந்து அருள்புரிவதாக ஐதீகம்?** மூன்று

**16997) அந்த மூன்றும் எது?**
அதாவது, ஊருக்குள் இருக்கும் மூல தெய்வம். அடுத்தது குலதெய்வம். பிறகு காவல் தெய்வம்.

**16998) அந்த அடிப்படையில் குலதெய்வ வழிபாடு ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியமா?** அவசியம்.

**16999) வருடம் ஒரு முறையாவது குடும்பத்தோடு சென்று குலதெய்வத்தை வழிபட்டால் என்ன நடக்கும்?**
நம்முடைய குலம் தழைத்து, வரும் சந்ததியினருக்கு சந்தோஷமான வாழ்க்கை கிடைக்கும்.

**17000) குல தெய்வம் பற்றி எதுவுமே அறிய இயலாத நிலையில் இருப்பவர்கள் என்னசெய்யலாம்?**
வளர்பிறை வெள்ளிக்கிழமை அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் குளித்துவிட்டு, அவரவர்கள் வழக்கப்படி நெற்றியில் திருநீறு அல்லது திருமண் இட்டுக்கொள்ள வேண்டும். பின்னர் வீட்டின் தலைவாசல் நிலையைக் கழுவி மஞ்சள் பூசி, குங்குமம், சந்தனம் இட்டு புதுத்துணி சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து, பொங்கல் இட்டு நிலை படிக்கு பூஜை செய்து வழிபட வேண்டும். அதன்மூலம் குடும்பத்தின் குலதெய்வம் பற்றிய தகவல் விரைவில் தெரியவரும் என்பது ஆன்மிக சான்றோர்களின் அறிவுரையாகும்.

**17001) குல தெய்வ வழிபாடு எவ்வளவு முக்கியமானது என்பது பற்றி யார் குறிப்பிடப்பட்டுள்ளார்?**
மறைந்த காஞ்சி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சாமிகள்

**17002) "ஒரு குடும்பத்தின் முன்னோர்கள் வணங்கி வந்த தெய்வமே எவ்வாறு அழைக்கப்படுகிறது?** 'குலதெய்வம்'

**17003) முன்னோர்கள் என்றால் இங்கு யாரை கணக்கில் கொள்ள வேண்டும்?**
தந்தைவழி பாட்டன் பாட்டி ஆகியோரை

**ஒரு குடும்பத்தில் உள்ள தந்தை வழி பாட்டன் வரிசையில், கச்சிதமான ஒழுங்கு முறை இருப்பதை காண முடியும். அதை என்னவென்று சொல்வார்கள்?**
'கோத்திரம்' (உட்பிரிவு) என்று சொல்வார்கள்.

**17004) மற்ற கோத்திரத்தில் பிறந்த பெண்கள் ஒரு குடும்பத்தில் வாழ்ந்த முன்னோர்களின் யாராக இருந்து இருந்திருப்பார்கள்?**
வாழ்க்கைத் துணையாக இருந்திருப்பார்கள்.

## பனங்காடு ஸ்ரீ நாககாளியம்மன் ஆலய உற்சவம்



வாச்சிக்குடா விஷேட நிருபர்

வரலாற்றுச் சிறப்புமிக்க அக்கரைப்பற்று பனங்காடு ஸ்ரீ நாககாளியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருச்சடங்கு பெருவிழாவின் தீமிதிப்பு அண்மையில் இடம்பெற்றது. இதனை முன்னிட்டதான சங்காபிசேகமும் பாற்குடபவனியும் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றதுடன் 30 ஆம் திகதி அம்மன் நகர்வலம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. பனங்காடு கேணிக்கரைப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான பாற்குடபவனி பிரதான வீதிகளினூடாக பனங்காடு பாசுபதேசுவரர் ஆலயத்தை சென்றடைந்து அங்கிருந்து ஸ்ரீP நாககாளியம்மன் ஆலயத்தை அடைந்தது. இதே நேரம் இன்று குறித்த வீதிகளினூடாக அம்மன் நகர்வலம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.





கடந்த 21ஆம் திகதி கணபதி ஹோமம் மற்றும் திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமான திருச்சடங்கானது 29ஆம் திகதி இடம்பெற்ற பாற்குடபவனி மற்றும் அம்மனின் ஊர்வலத்துடனும் சக்தி மகா யாகம் நோர்ப்பு நெல் நேர்தல் ஆகிய கிரியைகளுடனும் நிறைவுபெற்றது. ஆலய தலைவர் க.கந்தையாபிள்ளை தலைமையில் இடம்பெற்ற பாற்குடபவனியில் அம்மன் நகர்வலத்திலும் பெருந்திராளான அம்மன் அடியவர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்தியை நிறைவு செய்தனர்.

பின்னர் ஆலயத்தில் இடம்பெற்ற அம்மனுக்கான பாலாபிசேத்திலும் விசேட பூஜையிலும் கலந்து கொண்ட பக்தர்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலய வழிபாட்டு பிரதான கிரியைகள் யாவற்றையும் ஆலய பிரதமகுரு சிவசக்தி உபாசகர் சிவஸ்ரீ வி நடராஜா ஆரம்பித்து வைத்ததுடன் ஆலய உற்சவகால பிரதமகுரு சிவஸ்ரீ ந.சதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ கஜமுகசர்மா மற்றும் சிவஸ்ரீ த.குகனேஸ்வரசர்மா உள்ளிட்ட குருமார்களால் நடாத்தி வைக்கப்பட்டது.

சங்காபிசேக கிரியைகளில் அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசனும் கலந்து கொண்டார்.

## நவராத்திரி கொண்டாட்டத்தின் நோக்கம்



ஒருமனிதனுக்குஉடல்வலிமை, பராக்கிரமம், தீர்க்காயுள், புத்திபலம், ஞானம், மனோசக்தி என்று எல்லாவித அம்சங்களும் இருந்தால் தான் வெற்றியாளராகத் திகழமுடியும். இவற்றைப் பெறவே தேவியைப் பலவிதமான வடிவங்களில் நவராத்திரி காலங்களில் பூஜிக்கிறோம். முதல் மூன்று தினங்கள் பிரதமை முதல் திரிதியை வரையில் மகேஸ்வரனிடமிருந்து தோன்றிய மகேஸ்வரி, குமரப்பெருமானிடமிருந்து தோன்றிய கவுமாரி, வராகமூர்த்தியிடமிருந்து அவதரித்த வராஹி ஆகியோரை பூஜித்து மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் பெறுகிறோம். வாழ்வுக்கு பொருள் அவசியம் தேவை. எனவே, நான்காம் நாளான சதுர்த்தி முதல் மூன்று நாட்கள் வாழ்வில் வளம் தரும் திருமகளை குறித்த வழிபாட்டினைத் துவங்கவேண்டும். பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீதேவி, விஷ்ணுவிடமிருந்து தோன்றிய வைஷ்ணவிதேவி, இந்திரனிடமிருந்து தோன்றிய இந்திராணி மூவரையும் துதிக்க செல்வவளமும், பொருள்வளமும் பெற்று மகிழலாம். கடைசி மூன்று நாட்களான சப்தமி திதி முதல் நவமி திதி வரை மகா சரஸ்வதியைக் குறித்த வழிபாட்டினை செய்ய வேண்டும். நரசிம்மரின் சொரூபமாகிய நரசிம்ஹி, சண்ட முண்டர்களை வதம் செய்த சாமுண்டி, தயாளசிந்தை, ஞானம், வித்தை, கலைகளை அருளும் சரஸ்வதி தேவி ஆகியோரை வழிபாடு செய்ய ஞானம் உண்டாகும். எட்டாவது நாளே துர்க்காஷ்டமியாக மகிஷனை சம்ஹாரம் செய்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. நவதேவியர் வழிபாட்டினை ஒன்பது நாட்களும் செய்ய முடியாதவர்கள் கடைசி மூன்று தினங்களாவது வழிபாடு செய்தல் அவசியம்.

புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்கள் இரவில் பராசக்தியை பல வடிவாகப் பூஜித்து விழா நடத்தி வருகின்றனர். முதல் மூன்று நாட்கள் மலைமகள் அல்லது பார்வதி ஆராதனை நடைபெறும். பார்வதி அருள் வடிவம்; அவள் ஞானசொரூபி, கண்ணோட்டம், ஈகை, அன்பு, ஒப்பரவு முதலியவை அமைந்தவள். இவளது நிறம் பச்சை அல்லது நீலமாகும். இது வளமையையும் செழுமையையும் குறிக்கும். அவளது அருளும் அனுக்கிரகமும் பெறும் குறிக்கோளுடனேயே நவராத்திரியில் முதல் மூன்று நாளும் பராசக்தியைப் பூஜிக்கின்றோம்.

லட்சுமி சிவப்பு அல்லது பொன்னிற வடிவினள். சிவப்பு நிறம் அழகு, செம்மை, தியாகம், முதலியவற்றைக் குறிக்கும். செல்வத்துக்கு லட்சுமி அதிதேவதை, ஆதலால், பொருள் வளர்ச்சி நோக்குடன் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள் அனைவரும் நவராத்திரியில் நடுநின்ற மூன்று நாட்களில் லட்சுமி தேவியை பூஜிக்கின்றனர்.

இறுதி மூன்று நாட்களில் கலைமகளைப் பூஜிக்கின்றனர். இவள் வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள். வெள்ளை நிறம் மாசின்மை, வாய்மை, தூய்மை முதலிய அங்குணங்களைக் குறிக்கிறது. இவள் கலைகள் அனைத்துக்கும் அதிதேவதையாவள். அவள் படிகம் போன்ற நிறத்தினள்; பவளச் செவ்வாயினள். இவையனைத்தும் பரிசுத்தத்தின் அறிகுறியாகும்.

ஞானவளர்ச்சியை விரும்புவோர் கலைமகள் விழாவைக் கொண்டாடுவர். புதிய கலைகளைப் பத்தாம் நாள் விஜயதசமியன்று தொடங்கிப் பயில ஆரம்பிப்பர். பள்ளிக்கு சேர்த்தல் முதல் பரமயோக ஞானக் கலைகள் வரை பயிலத் தொடங்குவது விஜயதசமி நாளேயாகும்.

# மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி சுற்றுமதில் கடலரிப்பால் இடிந்து வீழ்ந்தது

## அவசரமாக கூடி நடவடிக்கை எடுக்க தீர்மானம்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளி வாசலின் ஜனாஸா மையவாடிச் சுற்றுமதில்கள் கடலரிப்புக்குள்ளாகி இடிந்து விழுந்துள்ளன.இதைத் தடுப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் கோரியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காததாலே,இவை இடிந்து விழுந்தமை குறிப்பிடத்தக்கது.

கடலரிப்பை தடுத்து ஜனாஸா மையவாடியின் சுற்றுமதிலை பாதுகாக்க காரைதீவு பிரதேச சபையின் உதவியுடன், மண் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன.எனினும் இந்த தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கை கைகூடவில்லை. மதில் இடிந்து விழுந்ததால்,கடலரிப்பு ஏற்பட்டு ஜனாஸாக்கள் nt வெளியில் தள்ளப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது.இதனால் ஏற்படவுள்ள பிரச்சினைகளை அவசரமாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினர்,இது தொடர்பில் அரச அதிகாரிகள், காரைதீவு பிரதேச சபையினர், அரசியல் கட்சிகளின் பிரதேச அமைப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் அழைப்பு விடுத்து,சனிக்கிழமை (03) மாலை அந்நூர் கலாசார மண்டபத்தில் அவசர கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இக்கூட்டத்தில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம், காரைதீவு பிரதேச சபை செயலாளர், காரைதீவு பிரதேச சபை பிரதி தவிசாளர் ஏ.எம். ஜாஹீர், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர், தேசிய காங்கிரஸ் அமைப்பாளர் யூ.எல்.என். ஹுதா, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டார அமைப்பாளர் எம்.எச்.எம். நாஸர், மாளிகைக்காடு கிராம நிலதாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அந்நூர் ஜும்மா பள்ளி பேஸ் இமாம், முன்னாள் தலைவர், பிரதி தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாகிகள் மற்றும் பல முக்கியதர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசலுக்கு அண்மித்த பகுதியில் புதிதாக ஜனாஸா மையவாடி ஒன்றை உருவாக்கவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



## சிறுவர் தின நிகழ்வுகள்

(தோப்பூர் குறூப் நிருபர்)

உலக சிறுவர் தின தினத்தை முன்னிட்டு தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சிறுவர் உரிமைகள் தொடர்பான சுலோகங்களை ஏந்தியவாறு,அமைதியான முறையில் ஊர்வலமும் இடம்பெற்றதுடன், துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.


**வெளிநாட்டில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டு இருந்துவிட்டு, "கொவிட் 19" காரணமாக மீண்டும் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ள உங்களுக்கு விடுக்கப்படும் விசேட அறிவித்தல்**

தனிமைப்படுத்தல் முடிவடைந்த உங்களுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு தகவல்களை வழங்குவதற்கு முடியாமல் போயிருப்பின், கீழ்க் காணும் பணியகத்தின் இணையத் தளத்திற்குப் பிரவேசித்து தகவல்களை வழங்கும் பத்திரத்தை பதிவிறக்கம் செய்துகொண்டு அதனை பூர்த்தி செய்து மீண்டும் பணியகத்திற்கு கிடைக்கச் செய்யுங்கள்

தகவல் பத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி

பிரதி பொது முகாமையாளர் (சமூக அபிவிருத்தி)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,
இல.234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,
கொஸ்வத்த பத்தரமுல்ல.

**www.slbfe.lk**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
24 மணி நேர சேவை 1989 மீள் ஒருங்கிணைப்புப் பிரிவு 0112791473






சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியில், பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. கடந்த வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்ற இந்நிகழ்வு, அதிபர் திருமதி ஜனுல் றிபாயா நஸீர் தலைமையில் நடைபெற்றது. இறக்காமம் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மௌலவி எம்.எச்.வஹாப் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கி வைத்தார். மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் பொருட்டு அதிபர், ஆசிரியர்களால் இனிப்பு பண்டங்களும் வழங்கப்பட்டன.

(படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

---

**02.10.2020 மற்றும் 03.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 1,458,799**

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 61,784,680.00**

**ரூ.2,000,000.00 பரிசுகள் 02 ரூ.1,000,000.00 பரிசுகள் 04 ரூ.100,000.00 பரிசுகள் 57**

NLB NATIONAL LOTTERIES

### ஜாதிக சம்பத (JATHIKA SAMPATHA)

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 1060 — திகதி 2020.10.03

ஆங்கில எழுத்து: O

வெற்றி இலக்கங்கள்: 2 2 5 9 4 1

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 01 பரிசு | 2 2 5 9 4 1 | ரூ. 2,000,000.00 | 0 |
| 02 பரிசு | 2 5 9 4 1 | ரூ. 100,000.00 | 3 |
| 03 பரிசு | 5 9 4 1 | ரூ. 10,000.00 | 27 |
| 04 பரிசு | 9 4 1 | ரூ. 1,000.00 | 293 |
| 05 பரிசு | 4 1 | ரூ. 50.00 | 3,061 |
| 06 பரிசு | 1 | ரூ. 20.00 | 29,220 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 07 பரிசு | 2 2 5 9 4 | ரூ. 10,000.00 | 6 |
| 08 பரிசு | 2 2 5 9 | ரூ. 1,000.00 | 31 |
| 09 பரிசு | 2 2 5 | ரூ. 100.00 | 301 |
| 10 பரிசு | 2 2 | ரூ. 50.00 | 3,067 |
| 11 பரிசு | O | ரூ. 20.00 | 13,398 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | 139 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,170,660.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 10,752,054.50

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416 Web : www.nlb.lk

### மஹஜன சம்பத (50)

சீட்டிழுப்பு இலக்கம் : 4263 | உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி : 02-10-2020

வெற்றி எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 9 6 3 0 1 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H 9 6 3 0 1 0 | ரூபா. 18,095,917/- | - |
| 1ஆம் பரிசு | 9 6 3 0 1 0 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 6 3 0 1 0 | ரூபா. 100,000/- | 13 |
| 3ஆம் பரிசு | 3 0 1 0 | ரூபா. 10,000/- | 142 |
| 4 ஆம் பரிசு | 0 1 0 | ரூபா. 1,000/- | 1,402 |
| 5ஆம் பரிசு | 1 0 | ரூபா. 100/- | 14,035 |
| 6ஆம் பரிசு | 0 | ரூபா. 20/- | 139,289 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 9 6 3 0 1 | ரூபா. 10,000/- | 13 |
| 8ஆம் பரிசு | 9 6 3 0 | ரூபா. 1,000/- | 141 |
| 9ஆம் பரிசு | 9 6 3 | ரூபா. 100/- | 1,390 |
| 10ஆம் பரிசு | 9 6 | ரூபா. 50/- | 13,969 |
| 11ஆம் பரிசு | H | ரூபா. 20/- | 55,601 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ.13,781,750.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,487,909.00

ரூ. 25,000 பெறுமதியான 50 பணப்பரிசுகளை வெற்றி பெற்றதற்கான விசேட இலக்கங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0121580 | 0958105 | 0249115 | 0231431 | 0018247 | 0598466 | 1437031 | 0731150 | 1025261 | 0273103 |
| 0806328 | 1313543 | 1102646 | 1141209 | 1341204 | 0491704 | 0477574 | 1107196 | 0216074 | 1128648 |
| 1292029 | 0176030 | 0084197 | 1556699 | 1392427 | 1078469 | 0640856 | 0079304 | 1138176 | 0116723 |
| 0327803 | 0119406 | 0484235 | 0222650 | 0631397 | 0773639 | 1172904 | 0650729 | 1613232 | 1281674 |
| 0834567 | 0910501 | 0679841 | 0501663 | 0436791 | 0589486 | 1201133 | 1255691 | 0313035 | 0917959 |

ரூபாய் 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை | NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம் | www.nlb.lk

### மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4264 உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 03-10-2020

வெற்றி எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 3 5 5 7 6 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 3 5 5 7 6 3 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 5 5 7 6 3 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 5 7 6 3 | ரூபா. 10,000/- | 114 |
| 4 ஆம் பரிசு | 7 6 3 | ரூபா. 1,000/- | 1,112 |
| 5ஆம் பரிசு | 6 3 | ரூபா. 100/- | 11,165 |
| 6ஆம் பரிசு | 3 | ரூபா. 20/- | 110,298 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 3 5 5 7 6 | ரூபா. 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 3 5 5 7 | ரூபா. 1,000/- | 106 |
| 9ஆம் பரிசு | 3 5 5 | ரூபா. 100/- | 1,136 |
| 10ஆம் பரிசு | 3 5 | ரூபா. 50/- | 11,039 |
| 11ஆம் பரிசு | F | ரூபா. 20/- | 43,841 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,542,830.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.20,283,674.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

### மெகா பவர் (Mega Power)

சீட்டிழுப்பு இலக்கம்: 630 — உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 02/10/2020

ஆங்கில எழுத்து: E — சுப்பர் இலக்கம்: 05 — வெற்றி இலக்கங்கள்: 37 38 56 58

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 123 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 312 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7,401 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,851 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 121,582 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 22,048 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .51,756,214.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,026,654.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.18,487,775.60

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,585,740.00

### மெகா பவர் (Mega Power)

சீட்டிழுப்பு இலக்கம்: 631 — உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 03/10/2020

ஆங்கில எழுத்து: Q — சுப்பர் இலக்கம்: 08 — வெற்றி இலக்கங்கள்: 46 63 72 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 08 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 125 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 280 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6,986 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,556 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 116,192 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 21,194 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .51,837,181.60

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,107,621.20 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.18,568,742.80

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 5,693,560.00

### நீரோகா (லக்ன ஜய)

சீட்டிழுப்பு இலக்கம் 708 — திகதி 2020/10/02 — உத்தியோகபூர்வ முடிவுகள்

லக்கினம்: தனுசு — வெற்றி இலக்கங்கள்: 18 27 28 59

| | பரிசு கட்டமைப்பு | பரிசு தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ.1,000,000/- | 1 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 10,000/- | 9 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 2,000/- | 71 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 200/- | 307 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- | 3,673 |
| 6ம் பரிசு | 1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 60/- | 4,708 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- | 52,441 |
| 8ம் பரிசு | லக்கினம் மட்டும் பொருந்துமாயின் | ரூ. 20/- | 19,418 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசு தொகை ரூ. 3,380,360.00

அடுத்த சுப்பர் பரிசு ரூ. 17,994,155.50

ரூ. 5 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசு அரசாங்க வரி சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகும். பரிசுப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாகும்

வெல்லப்பட்ட லொத்தர் சீட்டு, சீட்டிழுப்பு நடைபெற்ற தினத்திலிருந்து 6 மாத காலம் மாத்திரமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை — இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. அவசர அழைப்பு: 011 2324324, 011 4607000 இணையதளம்: www.nlb.lk

### உத்தியோகபூர்வ முடிவுகள்



சீட்டிழுப்பு திகதி 03 / 10 / 2020 — சீட்டிழுப்பு இலக்கம் 1540

சுப்பர் இலக்கம்: 10 — வெற்றி இலக்கங்கள்: 36 53 54 55

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 01 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 131 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 383 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4982 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4511 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 64310 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாததிரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 16126 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 3,205,180.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,084,895.88

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

### தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி - 2020/10/02 — சீட்டிழுப்பு இலக்கம் - 323

ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 12 43 69 73

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 67 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 151 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3,901 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2,718 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 66,736 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 12,368 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,687,260.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 85,943

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 118,084,725.44

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 2559 — சீட்டிழுப்பு திகதி 03.10.2020

ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 26 40 57 58

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 188 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 402 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10119 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6741 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 167564 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30581 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 215,602

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,622,440.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,936,677.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 2558 — சீட்டிழுப்பு திகதி 02.10.2020

ஆங்கில எழுத்து: D — வெற்றி இலக்கங்கள்: 36 49 61 65

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 187 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 439 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10645 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 7068 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 175650 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 32084 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 226,082

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 8,114,900.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,620,062.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை
## தொலைத்தொடர்புகள் மற்றும் பொது மக்கள் தொடர்பு
# 2021 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

2021 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிட்டுள்ள வகுதிகளில் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள், கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**01. அச்சடித்தல்:**
(அ) (i) புதினப்பத்திரிகைகள்/ சஞ்சிகைகள் (ii) துண்டுப் பிரசுரங்கள் (iii) விஷேட சிறுநூல்கள் / டொக்கட்டுக்கள் (iv) பிரசுரங்கள்
(ஆ) தொகுத்தல் / வருடாந்த அறிக்கைகளை அச்சடித்தல்

**02. நிழற்படம் அச்சிடல்:**
(i) நிழற்படங்களை அச்சிடல் (ii) நிழற்பட தொகுத்தல் (iii) அல்பங்கள்

**03. நிழற்படங்களுக்கான சட்டகம் அமைத்தல்**

04. **Flex Printing**
(i) Banner/Cutouts/Holdings

**05. கண்காட்சிக்கூடங்கள் (அமைத்தல்)**

**06. வாடகைக்கு அமர்த்துதல் / இலத்திரனியல் டிஜிட்டல் உருப்படிகள்**
(i) TV (ii) Video Panel (iii) Touch play video panel/Display Monitor (iv) Multi-media

**07. பரிசுப் பொருட்கள்**
(i) பரிசுப் பொருட்கள் (ii) நினைவுச்சின்னங்கள் (iii) நினைவுப்படிகம்

**08. நிகழ்வு முகாமைத்துவம்**
(i) உள்ளக (ii) வெளியக

**09. விளம்பரம் செய்தல்**
(i) இலத்திரனியல் (ii) அச்சிடல்

**நிபந்தனைகள்:**

01. வழங்குனர் ஒரு வ/ப பொறுப்புள்ள கம்பனியாக இருப்பின், கூட்டிணைப்பு சான்றிதழின் பிரதி இல்லாவிடின் பதிவுச் சான்றிதழின் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

02. புகழ்வாய்ந்த தனியார்/பொதுத் துறை நிறுவனங்களில் 2 வருட சேவை அடங்கலாக உரித்தான வகுதிகளின் இலக்கங்களில் உரித்தான வேலை அனுபவமாக மொத்தமாக மூன்று வருட அனுபவச்சான்றும் உங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. மேலே குறிப்பிட்டுள்ள 01 இலிருந்து 09 வரையிலான வகுதிகளுக்கான பதிவு செய்தலுக்காக தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எந்த வகுதிக்கான பதிவு தேவைப்படுகின்றதோ உரித்தான வகுதி இலக்கம் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். 2020.10.12 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-01, சைத்திய வீதி, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தொடர்பாடல் மற்றும் பொதுமக்கள் தொடர்புகள் பிரிவு, தொடர்புகள் மற்றும் பொதுமக்கள் தொடர்புகளுக்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பதிவு செய்தல் தேவைப்படும் ஒவ்வொரு வகுதிக்கும் தேகவ + பெசேவ அடங்கலாக 1000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பதிவு செய்தலுக்கான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

04. சேவைகளை பெறுவதற்காக சாதாரணமாக விலைமனுக்கோரல்கள் பதிவு செய்யப்பட்டு பட்டியலிடப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். இருப்பினும், பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்தும் விலைமனுக்கோரல்களை பெற்றுக் கொள்வதற்கும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்குமான உரிமையை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது கொண்டுள்ளது.

05. விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது வேலைக் கட்டளைகளுக்கமைவாக திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள நேரகாலத்தில் தேவைப்படுத்தப்படும் வேலைகளை பூர்த்தி செய்யத்தவறும் பதிவு பெற்றுள்ள வழங்குனர்களின் பெயர்கள் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பதிவு பெற்றுள்ள வழங்குனர்களின் பட்டியலிலிருந்து பதிவுநீக்கப்படுவார்கள்.

06. அனைத்து விண்ணப்பங்களும் பதிவுத் தபாலில் பிரதான முகாமையாளர் (தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்புகள்), தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்பு பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, சைத்திய வீதி, கொழும்பு-01 என முகவரியிடப்பட்டு 2020.11.02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Registration of Suppliers for 2021"** என்ற சொற்கள் எழுதப்பட்டு பிரதான முகாமையாளரை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்புகளுக்கான பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் நேரடியாகவும் ஒப்படைக்கப்படலாம்.

07. மேலதிக தகவலை 0112483100/ 0718 741662 ஆகிய தொலைபேசி எண்களினூடாக தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்பிற்கான உதவி முகாமையாளருடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர்,**
**தொடர்பாடல் மற்றும் பொதுமக்கள் தொடர்புகள்,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

## தெஹிவளை மாநகர சபை

# NSERVERS கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துவதற்கான போட்டி விலைமனுக்கோரல்

தெஹிவளை மற்றும் கல்கிசை மாநகர சபைக்குத் தேவையான Server Local Area Network கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | வகை | கேள்விப்பிணையின் பெறுமதி |
|---|---|---|
| 01 | Server and Accessories | 60,000.00 |
| 02 | Local Area Network | 60,000.00 |

01. உள்ளூர் வழங்குநர்கள்/பிரதிநிதிகளிடமிருந்து போட்டி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கள் சமர்ப்பிக்கும்போது ஒரு வழங்குநருக்கு/பிரதிநிதிக்கு இரு உருப்படிக்கும் வேறு வேறாக அல்லது ஒரு உருப்படிக்கு மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

03. குறித்த கேள்வி ஆவணங்களை 2020.10.06 முதல் 2020.10.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரையான காலத்திற்குள் தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் பிரதான மாநகர கணக்காளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

04. 2020.10.26 அல்லது அதற்கு முன் மீளளிக்கப்படாத ரூபா.2,000.00 தொகையை மாத்திரம் செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை கொள்வனவு செய்தல் வேண்டும்.

05. வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 4.00 வரை அலுவலக நேரங்களில் குறித்த இடத்தை பரீட்சிக்கலாம்.

06. பொறியிடப்பட்ட கேள்வி பத்திரங்கள் இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியை வேறு உறையிலும், நகல்பிரதியை வேறு உறையிலும் இட்டு அவற்றின் இடதுபக்க மேல் மூலையில் "Servers கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துவதற்காக விலைமனுக்கள்" என்றும் "Local Area Network கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துவதற்கான விலைமனுக்கள்" என்றும் குறிப்பிட்டு 2020.10.27 பிற்பகல் 2.00 இற்கு முன் கீழக்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பலாம் அல்லது எனது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம்.

07. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்வி சமர்ப்பிப்போர் அல்லது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். கேள்வி மாதிரிப்பத்திரத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதியுடைய கேள்விப் பிணையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி சமர்ப்பிக்காத அல்லது தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்குரியது.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**மாநகர ஆணையாளர்**
**4ஆம் மாடி,**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**

**தொலைபேசி இலக்கம் : 0112733450**

**டபிள்யூ.டீ.ஏ.மானெல்**
**மாநகர ஆணையாளர்**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**

## பிழைதிருத்தம்
## கொழும்பு மாநகர சபை
## பெறுகை அறிவித்தல்

2020 ஒக்டோபர் 02ஆம் திகதிய தினகரன் நாளிதழின் 31ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி தலைப்பிலான விளம்பரம் சம்பந்தமானது. கீழ்க்காணும் சேவைகள் மற்றும் உருப்படிகள் கீழ்ககாணுமாறு திருத்தப்படுகிறது என்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும்

| | தொடர்பிலக்கம் | விபரம் |
|---|---|---|
| 5 | CPD/16/3150/2020 | கொழும்பு நகர எல்லை வளாகங்களுக்கு ஜெனிட்டோரியல் சேவையினை வழங்குதல் - 03 |
| 6 | CPD/16/3050/2020 | மேயரின் நிலையத்திற்கு ஜெனிட்டோரியல் சேவையினை வழங்குதல் |
| 7 | CPD/17/1450/2020 | மாநகர அச்சகத்திற்கு அச்சுப்பொருட்களின் பெறுகை |

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை
**சட்டத்தரணி - ரோஷானி திசாநாயக்க**
**மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை.**

## பெயர் மாற்றம்

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அக்கரைச்சேனை கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் பசீர் றகுமான் ஆகிய நான் எனது பெயரை பசீர் அப்துல் றகுமான் என மாற்றிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் எனது பெயரை பசீர் அப்துல் றகுமான் என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் நாட்டு மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**பசீர் அப்துல் றகுமான்**

Repeat Your ad For Better Offers



மருதமுனை பாத்திமா ஸுபாவின் 'சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்' கவிதை நூல் வெளியீட்டுவிழா இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவரும், இலக்கிய விமர்சகருமான ஆசிரியர் ஜெஸ்மி எம். மூஸா தலைமையில் நடைபெற்றது. மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சரும்,தேசிய காங்கிரஸ் தேசியத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல். எம்.அதாஉல்லா, பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூலாசிரியரின் பெற்றோர்களான அப்துல் றஊப், கைரீயாதம்பதிக்கு நூலின் முதற் பிரதியை வழங்குவதைக் காணலாம்.
(படங்கள்;மருதமுனைதினகரன் நிருபர்)

# வழங்கல் அறிவித்தல்

**வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

## வன பாதுகாப்புத் திணைக்களம்

**வன பரிபாலனத் திணைக்களம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான பைனஸ் வனச் செய்கை ஒலியோ ரெசின் (Oleoresin Extraction) பிரித்தெடுத்தல் செயற்பாட்டிற்காக முதலீட்டாளர்கள்/ நிறுவனங்களில் கட்டணம் அறவிடும் செயன்முறையின் அடிப்படையில் வழங்குவதற்கு பகிரங்க விலைக் கோரல்**

### ஒப்பந்த இலக்கம் : FD/S&FM/06/06/RTOB-02

இல.82, ரஜமல்வத்த வீதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள வன பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைவரின் சார்பில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களுக்குள் அமைந்துள்ள பைனஸ் வனச் செய்கையில் (Pinus caribaea) ஒலியோ ரெசின் பிரித்தெடுத்தல் செயற்பாட்டிற்காக உள்ளூர் முதலீட்டாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

1. ஒலியோ ரெசின் பிரித்தெடுத்தல் செயற்பாட்டிற்காக வழங்கப்படும் பைனஸ் வனச் செய்கையில் மாவட்டங்களின் அடிப்படையில் விநியோகச் சுருக்கம் கீழே வழங்கப்பட்டுள்ளது. அந்த வனச்செய்கைகளின் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது (இணைப்பு இல.01) ஒலியோ ரெசின் பிரித்தெடுத்தலுக்கான கட்டணமாக ஒரு ஹெக்டயருக்கு வருடத்திற்கு குறைந்தது மனுக்கட்டணம் ரூபா.8,500.00 ஆவதுடன் பிரித்தெடுக்கப்படும் ஒலியோ ரெசினின் விற்பனை பெறுமதியில் 1% உம் செலுத்தப்படவேண்டும்.

| மாவட்டம் | அளவு (ஹெக்டயார்) |
|---|---|
| நுவரெலியா | 1340.9 |
| பதுளை | 830.06 |
| கண்டி | 1356.6 |
| மாத்தளை | 224.64 |
| கேகாலை | 125.95 |
| இரத்தினபுரி | 1230.5 |
| ஹம்பாந்தோட்டை | 153.81 |
| மாத்தறை | 692.1 |
| காலி | 28.48 |
| களுத்துறை | 21.75 |
| கம்பஹா | 36.5 |
| **மொத்த அலகுகள்** | **6041.29** |

**மனுதாரரின் தகைமைகள்**

தகுதியான மனுதாரர்கள் ஆவதற்கு மனுதாரருக்கு இருக்க வேண்டிய திரவ நிலை சொத்து மதிப்பு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கு கடந்த மூன்று வருட தணிக்கை செய்யப்பட்ட நிதியறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும்.

| ஹெக்டயார் அளவு | மில்லியன் ரூபாய் |
|---|---|
| 1 - 10 | 02 |
| 11 - 50 | 05 |
| 51 - 500 | 10 |
| 501 ற்கு மேல் | 15 |

2. இல.82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லயில் அமைந்துள்ள வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் வனவியல் மற்றும் வன வள நிர்வாகப்பிரிவிற்கு கோரல் ஒன்றை முன்வைப்பதன் மூலம் அந்த திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் (நிதி) இடம் **2020.10.05** ஆம் திகதி தொடக்கம் **2020.10.23** ஆம் திகதி வரை வாரநாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணித்தியாலங்கள் வரை மீளச்செலுத்தப்படாத **ரூபா.1,000/-** ஐ செலுத்துவதன் மூலம் மனு ஆவணத்தை விலைக்கு வாங்கமுடியும்.

3. மனு விண்ணப்பதாரருக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனைகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட மனுக்கள், முத்திரையிடப்பட்ட கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் **"ரெசின் பிரித்தெடுத்தல் செயற்பாடுற்கான பகிரங்க விலைமனுக்கோரல்"** என குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு **2020.10.26** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன் பதிவுத் தபாலின் மூலம் அனுப்புதல் அல்லது பிரதிப்பணிப்பாளர் (நிதி) இன் உத்தியோக பூர்வ அறையில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட முடியும். மனுக்கள் **2020.10.26** ஆம் திகதி **மு.ப 10.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அதே நாளில் **மு.ப 10.30** மணிக்கு பிரதிப்பணிப்பாளர் (நிதி) இன் உத்தியோக பூர்வ அறையில் மனுக்கள் திறக்கப்படும். மனுதாரருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு மனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்குகொள்ள முடியும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

4. அனைத்து மனுக்களும் இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியினால் வழங்கப்பட்ட '**வங்கிப்பிணையுடன்**' அல்லது வன பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தில் பணம் செலத்திய வரவுச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மனுக்காப்புறுதி 01 ஹெக்டயருக்கு ரூபா.85/- ஆக இருக்க வேண்டியதுடன் மனுக்காப்புறுதி **2020.11.23** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். மனுக்காப்புறுதிக்கு ஒவ்வாத அல்லது செல்லுபடியாகும் மனுக்காப்புறுதி அற்ற அல்லது வன பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தில் பணம் செலத்திய வரவுச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்காத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

5. தள வருகைகள் தொடர்பான செலவுகள் இதர செலவுகள் உள்ளிட்ட மனுக்களை தயாரிப்பதற்கு அல்லது கையளிப்பதலுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுகளுக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது.

6. மனுக்களை தெரிவு செய்யும், நிராகரிக்கும் முழு உரிமை திணைக்களத்தின் வழங்கல் குழுவிற்கு உண்டு. மனுக்கள் தொடர்பில் வழங்கல் குழுவினால் மேற்கொள்ளப்படும் முடிவுகளே இறுதி முடிவாகும்.

7. மேலதிக விபரங்களை வனப் பாதுகாவலர், வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனவியல் மற்றும் வன வள நிர்வாகப்பிரிவின் தொலைபேசி இலக்கம்- 0112866627 ஐ தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**மனுக்களுக்கான திணைக்கள சபை,**
**வன பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 82, ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**

# மொரவெவ பொலிஸ் பிரிவில் ஆயுதங்கள் மீட்பு

*றொட்டவெவ குறூப் நிருபர்*



திருகோணமலைமொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தாம் கட்டை காட்டுப் பகுதியில்,ஒரு தொகை ஆயுதங்களை மீட்டுள்ளதாக விசேட பொலிஸ்
அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

காட்டுக்குச் சென்ற நபரொருவர் வழங்கிய தகவலை வைத்தே,இவ்வாயுதங்கள் மீட்கப்பட்டன.காட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர்,அங்கிருந்த
கட் குவாரிக்கு அருகில், T 56 துப்பாக்கி ரவைகள் 155 மற்றும் மெகசின் என்பவற்றை மீட்டனர்.

பன்குளம் காட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் கடந்த யுத்த காலத்தின் போது விடுதலை புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டவையாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவை தற்போது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை சர்தாபுர விஷேட பொலிஸ் அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.



ஜனாதிபதியின் 10லட்சம் மரம் நடும் வேலைத் திட்டத்தின் கீழ், சாய்ந்தமருது ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் மரங்கள் நடப்பட்டன. வைத்தியர் ஜனாபா ஏ.எஸ். என்.சுல்சான், மூலிகை மரம் ஒன்றை நட்டு,இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பாரம்பரிய வைத்தியர் ஏ.எல்.அமீர், வைத்திய சாலையின் ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
(படம்: கல்முனை விஷேட நிருபர்)

# கற்பாறையிலிருந்து விழுந்து உயிரிழப்பு

*(கந்தளாய் தினகரன் நிருபர்)*

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்து விழுந்து, நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (03) இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. மோட்டார்சைக்கிளில் வருகை தந்த இந்நபர், கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்த கற்பாறையில் விழுந்து சிக்குண்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தனது மோட்டார் சைக்கிளின் அனுமதிப்பத்திரம்,சாரதி அடையாள அட்டை மற்றும் தலைக்கவசம் போன்ற பொருட்களை கோவில் வளாகத்தினுள் வைத்துவிட்டு விழுந்துள்ளதாக தெரிய வருகின்றது.

அவரது சடலம், தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உவர்மலை பகுதியைச் சேர்ந்த ஏ.செந்தூரன் (38 வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# மழை பெய்யாததால் விவசாயிகள் கவலை

*(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)*

நாவிதன்வெளி பிரதேச செலகத்திற்குட்பட்ட விவசாயிகள் புழுதி விதைப்பிற்காக வயலை உழுத நிலையில், மழையை எதிர்பார்த்துள்ளனர்.மழை பெய்யாததால்
விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மானாவாரிச் செய்கையான பெரும்போகத்தில் அதிகளவு மேட்டுநில வயல்கள் புழுதி விதைப்பின் மூலமே செய்கை பண்ணப்படுவது வழக்கமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் சில பிரதேசங்களில் காற்று வீசி மழை பெய்த போதும் சடயந்தலாவ, சவளக்கடை பிரதேசங்களில் மழை பெய்யாததால், இப்பிரதேச விவசாயிகள் கடும் கவலையடைந்துள்ளனர்.




லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 25 ஆண்டுகள் பணியாற்றிய வடக்கை சேர்ந்த நிருபர்கள் மற்றும் ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு தினகரனின் 'வடக்கின் உதயம்' ஆரம்ப விழாவில் நடைபெற்றது. இதில் தினகரன் பத்திரிகையின் 'கரவெட்டி தினகரன் நிருபரான எஸ். தில்லைநாதன், வேலணை குறூப் நிருபரான இ.சற்குருநாதன் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பணியாற்றிய வேலுப்பிள்ளை முருகேசு ஆகியோருக்கு லேக்ஹவுஸ் நிறுவன ஆசிரியபீட பணிப்பாளர் தர்மசிறி காரியவசம் விருது வழங்கி கௌரவிப்பதையும், அருகில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசியர் தே.செந்தில் வேலவர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: ஐ.சிவசாந்தன்)

## 19 மஞ்சள் மூடைகளுடன் சந்தேகநபர் இருவர் கைது



**மன்னார் குறூப் நிருபர்**

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட 902 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் இச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் நேற்று முன்தினம் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதே கைப்பற்றப்பட்டுள்ளன.

தாழ்வுபாட்டு கடற்கரைக்கு வந்த சந்தேகத்திற்கிடமான படகினை கடற்படையினர் சோதனையிட்டனர். இதன்போது 19 மூடைகளில் பொதி செய்யப்பட்ட சுமார் 902 கிலோ கிராம் மஞ்சள் கண்டு பிடிக்கப்பட்டதுடன் படகிலிருந்த 02 சந்தேக நபர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூடைகள் சுங்கத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் இருவரும் தனிமைப்படுத்தலுக்காக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிகளின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் மஞ்சள் தூள் பதுக்கி வைக்கப்பட்டு 3500 ரூபாய் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுப் பிரச்சினையை தீர்க்க தொடர்மாடித் திட்டம்



## பிராந்திய ஊடகவியலாளர்கள் ஒரு சங்கமாக இணைய வேண்டும்

**வவுனியா விசேட நிருபர்**

நாட்டில் மக்களின் வீடில்லா பிரச்சினைகளை தீர்க்க அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று தொடர்மாடி வீடுகளை அமைக்க தீர்மானித்துள்ளதாக வெகுசன ஊடக அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார். இதனை தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

வினைத்திறன் மிக்க ஒரு சேவையை வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம். நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்கொண்டு செல்ல உங்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் பார்க்கின்ற போது ஊடகத்துறையில் ஒரே பாங்கான பிரச்சினைகளே உள்ளன.

ஜனாதிபதி அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்கும் போது இராஜாங்க அமைச்சுக்களுக்கும் ஒதுக்கீடுகளை வழங்கி அதனூடகவும் விரைவாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளார்.

தெற்கு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வரப்பிரசாதங்களும் எங்களுக்கும் கிட்ட வேண்டும் என வடக்கு ஊடகவியலாளர்கள் கோருகின்றனர். வடக்காக இருக்கட்டும், தெற்காக இருக்கட்டும், மேற்காக இருக்கட்டும், கிழக்காக இருக்கட்டும் ஊடகவியலாளர்கள் பொதுவாகவே நோக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளும் பொதுவாகவே காணப்படுகின்றன.

கொழும்பில் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் தகவல் பரிமாற்ற உபகரணங்களுக்கும், பிராந்திய ஊடகவியலாளர்களின் உபகரணங்களுக்கும் வேறுபாடுகள் இருக்க கூடும். பிரதேச ரீதியிலான ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து ஒரு சங்கமாக தமது பிரச்சினைகளை எழுத்து மூலம் முன்வைக்கலாம்.

பிரதேச ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு பிரச்சினைகள் பல இருப்பதை நான் காண்கின்றேன். ஊடகவியலாளர்கள் யார்? என்ன தன்மையை கொண்டிருப்பார்கள் என்ற கேள்வி எங்களிடமும் இருக்கின்றது. எங்களால் முடிந்த சேவைகளையும், சலுகைகளையும் வழங்குவதற்கு நாங்கள் முயல்வோம் என்றார்.

## ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய 2 பெண்கள் உட்பட 20 பேர் தனிமைப்படுத்தல்

**யாழ்.விசேட நிருபர்**

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை பெண் பணியாளருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று முன்தினம் இரவு கண்டறியப்பட்டுள்ள நிலையில் அங்கு பணி புரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவர் உட்பட அவர்களுடன் தொடர்புடைய 20 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் புங்குடுதீவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் ஒருவர் கடந்த 30ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.

அவர் கடந்த 4 நாட்களில் பழகியவர்கள் தொடர்பில் தகவல் பெறப்பட்டு அவர்கள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆடைத் தொழிற்சாலையில் பணி புரியும் மற்றைய பெண் நேற்று வீடு திரும்பியுள்ளார். அவரது குடும்பமும் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இருவருடனும் தொடர்புடையவர்கள் என 20 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களிடம் நேற்று மாலை பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. பரிசோதனையின் அறிக்கை கிடைத்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, ஆடைத் தொழிற்சாலை பணியாளர் இருவரும் பேருந்திலேயே புங்குடுதீவுக்கு வருகை தந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 72 உள்ளூராட்சி சபைகளிலும் 87 அபிவிருத்திகளை ஒரே நேரத்தில் முன்னெடுக்கும் திட்டம் விரைவில்

**ரமேஸ்**

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பிரதேச அபிவிருத்திக்கு உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் 72 உள்ளூராட்சி சபைகளிலும் பல மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டின் அடிப்டையில் 87 அபிவிருத்தி திட்டங்கள் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களின் நேரடி கண்காணிப்பு அபிவிருத்தியின் கீழ் இத்திட்டம் ஆகக் கூடியது 90 நாட்களை அடிப்படையாக கொண்டு விரைந்த அடிப்படையில் முன்னகர்த்தப்படவுள்ளது.

ஆசிய அபிவருத்தி வங்கி, ஐரோப்பிய யூனியன், இலங்கை அரசு ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் இத்திட்டம் முதற்கட்டமாக முன்னகர்த்தப்படுகின்றது.

நாடு தழுவிய ரீதியில் விலை மனுக் கோரப்பட்டுள்ளதால் வடக்கு, கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளிலும் இன்னும் மூன்று வாரங்களில் உட்கட்டுமான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளதாக தேசிய திட்ட பிரதேச உதவியளிக்கும் திட்டதின் திட்டப் பிரிவு அறிவித்துள்ளது. இத்திட்டதை முன்னெடுப்பதற்காக தேசிய திட்டப்பிரிவு ஏற்கனவே உட்கட்டுமான அபிவிருத்தி திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியை அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக விடுவிப்பு செய்துள்ளது.

## யாழில் மாநகர சபை முதல்வர்களின் மாநாடு

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**



இலங்கையில் உள்ள மாநகர சபைகளின் முதல்வர்கள் பங்குபற்றும் வருடாந்த மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்ற ஒன்றியங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், பிரதம நிறைவேற்று அதிகாரி கேமந்தி குனசேகர நெறிப்படுத்தலில், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் குறித்த மாநாடு நடைபெற்றது.

முதல்வர் மாநாட்டில் இலங்கையில் உள்ள 24 மாநகர சபைகளின் முதல்வர்களில் 18 மாநகர சபை முதல்வர்கள் கலந்துகொண்டபோதும் 6 மாநகர சபைகளின் முதல்வர்கள் பங்குபற்றி இருக்கவில்லை. கொழும்பு, அக்கரைப்பற்று, நுவரெலியா, கல்முனை,பண்டாரவளை மற்றும் தெகிவளை - கல்கிசை ஆகிய மாநகர சபைகளின் முதல்வர்களே குறித்த மாநாட்டில் பங்குபற்றியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மக்கள் நலனுக்கான கோரிக்கைகளை முன்வைத்து விழிப்புணர்வு பேரணி

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



கிளிநொச்சியில் சமூக விழிப்புணர்வு நடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று காலை 6.45க்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பமான இந் நடை பேரணி 9.2 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நிறைவடைந்தது.

இப் பேரணியானது, சமூகத்தில் ஏற்பட்டுள்ள போதை பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வாகவும், வீதி விபத்துக்களை தடுத்தல், சுத்தமான சூழலை பேணுதல் போன்ற சமூக பொது நோக்கங்களை முன்வைத்து நடைபெற்றது.

எதிர்வரும் வாரம் கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலையில் ஆரம்பித்து வட்டக்கச்சி மத்திய கல்லூரி வரை நடைபெறவுள்ளது. நேற்று நடைபெற்ற விழிப்புணர்வில் மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன், யாழ் பல்லைக்கழக கிளிநொச்சி வளாகங்களான தொழிநுட்ப பீடாதிபதி சிவமதி, விவசாய பீட பீடாதிபதி சூரியகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரும் கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் இணைப்பாளருமான மருத்துவர். த. சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## மன்னாருக்கு அழகு சேர்க்கும்

# அல்லி ராணி கோட்டை

மன்னார் அல்லி ராணி கோட்டை, இலங்கையின் வரலாற்றுக் கால பாரம்பரியங்களில் ஒன்றாகவும், தொல்லியல் சான்றுகளில் ஒன்றாகவும் இருக்கிறது.

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரிப்பு கிராமத்தின் கடலோரப் பகுதியில் அமைந்துள்ள இக் கோட்டையின் பெரும்பாலான பாகங்கள் அழிவடைந்த நிலையில் உள்ளது.

இவ் அல்லிராணி கோட்டையை இராவணன் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை என்றே இப் பிரதேச மக்கள் அடையாளப்படுத்துகின்றனர். ஆனால் வரலாறு கூறும் உண்மைகளையும் ஆராய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அந்த வகையில் இலங்கைத் தீவின் முதல் பிரித்தானிய ஆளுனர் பிரட்ரிக் நோர்த் என்பவரால் உருவாக்கப்பட்ட வாசஸ்தலமே இக் கோட்டை எனவும் கூறப்படுகின்றது. இது 4 அறைகளை கொண்டிருந்ததாகவும் இரண்டு தட்டுக்களை கொண்டு உருவாக்கப்பட்டதாகவும் சில வரலாற்று தகவல்களில் குறிப்பிடப்படுகின்றன.

மன்னார் தீவின் அழகிய கட்டடமாகவும், நிர்மாணக்கலைக்கு அமைவாக கட்டப்பட்ட ஒரேயொரு கட்டடம் எனவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆனால் உண்மையில் இக் கோட்டை இராவணனால் உருவாக்கப்பட்டதா? அல்லது பிரட்ரிக் நோர்தினால் உருவாக்கப்பட்டதா? என்பது தொடர்பில் சந்தேகங்கள் நிலவிய வண்ணமே உள்ளன.

உண்மையில் இக் கோட்டை இராவணனால் கட்டப்பட்டதாக இருந்தால் பல யுகங்களை தாண்டி பரிணமிக்கும் உலகின் ஒரேயொரு 'கோட்டை' என்ற சிறப்பை பெறும். இராவணன் கட்டிய கோட்டை, மன்னாரின் அடையாளச் சின்னம் என பல சாதனைகளை தன்னகத்தே கொண்ட வரலாற்று இடம் தான் அல்லிராணி கோட்டை.

வரண்ட தரிசு நிலப்பகுதியில் அமைந்துள்ள இக் கோட்டை முதன் முதலில் போர்த்துக்கீசரால் கட்டப்பட்டது. 1658ல் இதனைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் புனரமைத்தனர்.

கம்பீரத்தின் அடையாளம் போல் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவும், அல்லிப் பூக்களின் வாசனைக்கு மத்தியில் குறித்த கோட்டை அமைந்திருப்பதனால் அல்லிராணி கோட்டை எனப் பெயர் வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

ஏறத்தாழச் சதுர வடிவமானது. இதன் பக்கங்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளை நேராக நோக்கியிருக்கும்படி அமைந்துள்ளன. கோட்டையின் வடமேற்கு மூலையிலும், தென்கிழக்கு மூலையிலும் இரண்டு கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் உட்புறம் கோட்டையின் வடக்குச் சுவரையும், கிழக்குச் சுவரையும் அண்டி வீரர்கள் தங்குவதற்கான அறையும், வேறு சிறிய அறைகளும் காணப்படுகின்றன. தெற்குப்புறச் சுவரில் கோட்டை வாசல் உள்ளது.

கடல் அலையின் தாக்கத்தால் கோட்டையின் பகுதிகள் சில கடலில் மூழ்கியுள்ள போதும் மிகுதி பாதியும் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. யுத்த காலத்தில் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்த நிலையில் யுத்தத்தின் பின் அதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இதனால் தற்போது அல்லி ராணிக் கோட்டையினை பார்ப்பதற்கு சுற்றுலாத்துறையினரின் வருகையும் அதிகரித்துள்ளது.

முறையான புனரமைப்பு பணிகள் இல்லாமல் கைவிடப்பட்ட நிலையில் இக் கோட்டை காணப்படுகின்றது. பெயருக்கேற்ற பிரமிப்பும் அழகும் அடியோடு அழிந்து போய்விட இன்று செங்கல் சுவர் மட்டுமே இக்கோட்டையின் அடையாளச் சின்னமாக காணப்படுகின்றது.

தனிமையின் அடையாளமாக திகழ்ந்த அல்லிராணிக் கோட்டை இனியும் தனிமையில் அழிய விடாமல் காப்பது எம்மவரின் தலையாய கடமையும், உணர்சி பூர்வமான செயற்பாடும் ஆகும்.

தனித்த கடற்பகுதி, அலைகளின் சத்தம், அமைதியான காற்று என அல்லி ராணி கோட்டையின் சிறப்பம்சம் வேறெங்கும் கிடைக்குமா என்பதும் கேள்விக்குறியே.









எஸ்.றொசேரியன் லெம்பேட்

## பொலிஸார் மீது தாக்குதல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்.பருத்தித்துறை பகுதியில் பொலிசார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நகரில் இடம்பெற்ற கோஷ்டி மோதலினை கட்டுப்படுத்த சென்ற பொலிசார் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதுடன் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதியோர், சிறுவர் தின நிகழ்வுகள்

**புதுக்குடியிருப்பு நிருபர்**

சர்வதேச சிறுவர் தினமும் முதியோர் கௌரவிப்பும் பளம்பாசி மாடுச் சந்தியில் அமைந்துள்ள கற்பகா அறநெறி பாடசாலையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான கு.திலீபன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். 'எமது நாடு எமது கரங்களில்' என்ற தொனிப்பொருளில் சிறுவர் தின நிகழ்வும் முதியோர் கௌரவிப்பும் நடைபெற்றுள்ளது. சிறுவர்களின் கலை நிகழ்வுகளுடன் கிராமத்தில் உள்ள முதியவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

★ ★ ★

**நாகர்கோவில் விஷேட நிருபர்**



சிறுவர் தின வைபவம் வதிரி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

நெல்லியடி பொலிசாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச் சிறுவர் தின விழாவிற்கு வதிரி ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர் இல்லத் தலைவர் சிவரஞ்சினி விஜயகுமார் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்களுக்கு நெல்லியடி பொலிசாரினால் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## விழுது அமைப்பால் கொரோனா நிவாரணம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் அனுசரணை மற்றும் ஐ.நா பெண்களின் பங்களிப்புடன் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 1306 குடும்பங்களுக்கு எழுபது இலட்சம் ரூபா பெறுமதியில் கொரோனா நிவாரணம் வழங்கப்பட்டன. விழுது நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் க.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக விழுது நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் மைத்திரேயி ராஜசிங்கம் கலந்துகொண்டு உலர் உணவுப் பொதிகள் மற்றும் கொரோனா பாதுகாப்பு பொருட்களை வழங்கி வைத்தார்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ள குடும்பங்கள், திருநர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் சமூகத்தில் மிகவும் நலிவடைந்த குடும்பங்களுக்கு இந்த உதவிப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## முத்திரையிடும் பணி இன்று

**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடமராட்சி, பருத்தித்துறை நவீன சந்தை வளாகத்தில் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்கிழமையும் நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் பணி நடைபெறவுள்ளதாக நகரசபை தவிசாளர் யோ. இருதயராஜா தெரிவித்தார்.

மரக்கறி, மீன் சந்தை, இறைச்சிக்கடை வியாபாரிகள் ப.நோ.கூ. சங்கத்தினர் நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிட்டு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கடற்கரையில் ஆணின் சடலம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட அல்லைப்பிட்டி வெண்புறா விநாயகர் ஆலய கடற்கரை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக ஊர்காவல்துறை பொலிசார் தெரிவித்தனர். நேற்று மதியம் இச் சடலம் கரையொதுங்கியதாகவும் இது தமிழ்நாடு இராமேஸ்வரம் அல்லது தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவராக இருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய ரோலர் படகுகளை கட்டுப்படுத்த வேண்டும்

### முல்லை. மீனவர்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்கின்ற இந்திய ரோலர்களின் தொழில் நடவடிக்கையினை கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மீனவர்கள் கூறுகையில்,

கடந்த பத்தாண்டுகளாக இந்திய ரோலர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதன் காரணமாக உள்ளூர் கடற்றொழிலாளர்களாகிய நாம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றோம்.

காலத்திற்கு காலம் இந்திய ரோலர்களின் தொழில் நடவடிக்கைக்கு எதிராக முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி மாவட்டச் செயலகத்தில் ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர்கள் ஆகியோருக்கு மனுக்கள் கையளித்தும் இந்திய ரோலர்கள் தொடர்ச்சியாக மீன் பிடியில் ஈடுபடுகின்றன.

சில காலங்களில் இந்திய ரோலர்கள் வருகை குறைந்திருந்தாலும் தற்போது இந்திய ரோலர்களின் நடவடிக்கைகள் மாத்தளன், சாலை ஆகிய கடற்பரப்பில் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் மாவட்டச் செயலகத்தில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதேவேளை முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் இந்திய ரோலர்களைக் கட்டுப்படுத்தாத நிலையும் காணப்படுகின்றது என்றனர்.



ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் ஊடக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஆகியோருக்கும் வவுனியா ஊடகவியலாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிற்கு அமைச்சர்கள் அழைத்துவரப்பட்ட போது... படம்: வவுனியா விசேட நிருபர்

# "கிராமங்கள் தோறும் கலைஞர் மன்றங்கள் உருவாக வேண்டும்"

**தலைமன்னார் விஷேட நிருபர்**

கிராமங்கள் தோறும் கலைஞர் மன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இதற்கு சிரேஷ்ட கலைஞர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் நடைபெறவிருக்கும் இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் 49 கிராமங்கள் இருக்கின்றபோதும் 13 கலா மன்றங்களே காணப்படுகின்றன. இன்று மிகவும் சவாலக இருந்துவரும் குடும்ப, சமூக சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் நாம் கலா மன்றங்கள் மற்றும் விளையாட்டுத் துறைகளை ஊக்குவிக்க வேண்டும். இதற்கு கலைஞர் பேரவையின் பங்களிப்பு மிக முக்கியமாக தேவைப்படுகின்றது.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் கலா மன்றங்களை புனரமைக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அவ்வாறு இளைஞர் யுவதிகளை ஒன்றினைத்து கிராமங்கள் தோறும் எமது பாரம்பரிய கலைகள் அழிந்து போகாவண்ணம் கலைஞர் மன்றங்களை உருவாக்க வேண்டும்.

அத்துடன் இவ் கலைஞர் பேரவையில் முதிர்ந்த வயதுடையவர்களையே அதிகம் காணப்படுவதால் எதிர்காலத்தில் இளைஞர் யுவதிகளையும் இணைத்த ஒரு பேரவையாக இது அமைய வேண்டும் என்றார்.

# கல்லூரிக்கு எதிராக பழைய மாணவர்கள் இருவர் அவதூறு

### ஆளுநரிடம் பெற்றோர் மனு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரிக்கு எதிராக பழைய மாணவர்கள் இருவர் இணையத் தளங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பொய்யான பரப்புரைகளில் ஈடுபட்டிருப்பது தொடர்பாக பெற்றோர்களினால் வடமாகாண ஆளுநரிடம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி தொடர்பாக இரு பழைய மாணவர்களும் பல்வேறு குற்றச்சாட்டுகளை தெரிவித்ததுடன் அதனை இணையத் தளங்கள் மற்றும் சமூக வலைத் தளங்களில் பதிவேற்றியிருந்ததாக பெற்றோர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஒன்று திரண்ட பெற்றோர்கள் 379 பேரின் கையொப்பத்துடன் ஆளுநருக்கு மனு ஒன்றினைக் கையளித்திருந்தனர். கல்லூரி தொடர்பாகவும் கல்லூரி முதல்வர் தொடர்பாகவும் இரு பழைய மாணவர்களினாலும் பொய்யான குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தனிடம் கேட்ட போது, இக் கல்லூரி தொடர்பாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன.

கடந்த காலங்களிலும் இக் கல்லூரி மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடைபெற்ற விசாரணைகளில் குற்றங்கள் இனங்காணப்படவில்லை என்றார்.

# அழிவடையும் நெடுங்கேணி பேருந்து நிலையம் -மக்கள் விசனம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

2010ம் ஆண்டு மீள்குடியேற்றத்திற்கு பின்னராக அமைக்கப்பட்ட நெடுங்கேணி பேருந்து நிலையம் அழிவடைந்து செல்லும் நிலையில் உள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் போக்குவரத்து வசதிகளும், தங்குமிட வசதிகளும், 15க்கு மேற்பட்ட கடைத் தொகுதிகளும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

இக் கட்டடம் அமைத்த காலத்தில் கடைத்தொகுதிகளை போட்டி போட்டு வியாபாரிகள் எடுத்தனர். ஆனால் கடைகளை எடுத்து நடத்தியவர்களும் கடைகளை மூடியுள்ளனர். கடைகளை ஒழுங்காக திறந்து நடத்திய வரலாறே



இல்லை என வியாபாரிகள் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

இவ்வாறாக பல மில்லியன் ரூபா பணங்களை செலவு செய்து கட்டடப்படும் பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் இருப்பதாக தெரியவில்லை. இதேபோல் வவுனியா பேருந்து நிலையம் உத்தியோக பூர்வமாக திறக்கப்பட்டும் பல்வேறு குறைபாடுகளை கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு நன்மைபயப்பதாக 20வது திருத்தத்தை மாற்றுவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான்

**ஓமந்தை விஷேட நிருபர்**



அரசியலமைப்பின் மீது கொண்டுவரப்படவுள்ள 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மக்களுக்கு நன்மைபயப்பதாக மாற்றியமைத்து தருவோம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற கற்குளம் வீதி புனரமைப்பு ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

இருபதாவது அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பாக பல விமர்சனங்கள் வருகின்றன. இவ் இருபதாவது திருத்தம் தற்போது தான் முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல விமர்சனங்கள் வருகின்றன. அவ்வாறு வருகின்ற விமர்சனங்களை எல்லாம் ஒன்று திரட்டி இலங்கை மக்களுக்கு பிரயோசனமாக அமையக்கூடிய ஒரு திருத்தமாகவே இது கொண்டுவரப்படும்.

மக்களுக்கு பாதிப்பு இல்லாததும், மக்களுக்கான விரைவான அபிவிருத்திகள், மக்களுக்கு அரசியல் மட்டத்திலோ அல்லது அதிகாரிகள் மட்டத்திலோ ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்க்கின்ற விதத்திலே நல்லதொரு அரசியல் அமைப்பு கிடைக்கும்.

இது தொடர்பாக பலவற்றை பேசுவார்கள். குறிப்பாக எதிர்க்கட்சி என்றாலே எதிர்ப்பதுதான் வேலையாகும். அவ்வாறான பேச்சை கேட்டு மக்கள் யோசிக்க வேண்டிய தேவையில்லை. இவ் இருபதாவது திருத்தத்தையும் மக்களுக்கு நன்மை பயக்குமாறு செய்து தருவோம் என்றார்.

# ஓமந்தை பகுதியில் இயங்கும் ஈயத் தொழிற்சாலைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### பாராளுமன்ற உறுப்பினர் திலீபன்

**புதுக்குடியிருப்பு நிருபர்**



வவுனியா ஓமந்தைப் பகுதியில் இயங்கும் ஈயத் தொழிற்சாலைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற முதியோர், சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

அபிவிருத்திக் குழு தலைவராக பொறுப்பேற்ற பின்னர் முதல் கடிதம் ஓமந்தையில் இயங்கிவரும் ஈய தொழிற்சாலை தொடர்பாகவே கிடைக்கப்பெற்றது. இத் தொழிற்சாலை சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதாக அம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியில் விவசாய நிலங்கள் அதிகளவாக கொண்ட பிரதேசம் ஓமந்தை. இப் பகுதியில் பற்றியில் இருந்து ஈயம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையால் மாசு படுத்தல் செயற்பாடு இடம்பெற்று வருவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை தொடர்ந்து அங்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளேன்.

பற்றியில் இருந்து வரக்கூடிய அமிலத்தன்மைகள் கொண்ட நீர், மருந்துகள் நிலத்தில் கொட்டப்பட்டுள்ளன. இது சுற்றுப்புறத்திற்கும் நிலத்தடி நீருக்கும் கேடு விளைவிக்கும் செயற்பாடு.

இதில் கவலையளிக்கின்ற விடயம் இதற்கான அனுமதியினை தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆழுகையில் உள்ள பிரதேச சபை வழங்கியுள்ளது.

இது குறித்து குறித்த பிரதேச சபை மற்றும் சுற்றுச் சூழல் திணைக்களத்திடம் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பவுள்ளேன். விரைவில் ஈய தொழிற்சாலைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன் என்றார்.

# கொரோனா சமூகத் தொற்று தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்படுங்கள்

### யாழ்.மாவட்ட அரச அதிபர்

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

யாழ். மாவட்ட மக்கள் கொரோனா சமூகத் தொற்று தொடர்பாக விழிப்புடன் செயற்படுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா தொற்று அச்ச நிலைமை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொட, திவுலபிட்டிய பகுதிகயில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்டதையடுத்து நாடு பூராகவும் சுகாதார அமைச்சு, கொரோனா தடுப்பு செயலணியினால் கொரோனா தொற்றினை தடுக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இச் சந்தர்ப்பத்தில் யாழ்.மாவட்ட பொது மக்கள் அவதானமாகச் செயற்பட்டு தங்களைத் தாங்களாகவே பாதுகாத்துக்கொள்ள முன்வர வேண்டும்.



சாவகச்சேரி குருவிக்காட்டு பகுதியில் 'விதை அனைத்தும் விருட்சம்' அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட சிரமதான பணியினை படத்தில் காணலாம். படம்: சாவகச்சேரி விசேட நிருபர்

# வவுனியாவில் இடியன் துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**



வவுனியா பன்றிகெய்தகுளத்தில் விலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படும் சட்டவிரோத துப்பாக்கிகளுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக ஓமந்தை பொலிசார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பன்றிகெய்தகுளத்தில் வீடு ஒன்றில் சட்டவிரோதமாக துப்பாக்கிகளை (இடியன்துவக்கு) மறைத்து வைத்திருப்பதாக ஓமந்தை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்து பொலிசார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் மீட்கப்பட்டதுடன் அதனை தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா ஓமந்தை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கின் திடல்

northsports.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 5 திங்கட்கிழமை




# வெற்றிவாகை சூடியது யாழ். அணி

**வவுனியா விளையாட்டு நிருபர்**

வடமாகாண பிரீமியர் லீக் 2020 வடமாகாண பிரீமியர் லீக் தொடரின் இறுதிச் சுற்றில் யாழ். மற்றும் முல்லை அணியினர் மோதிக்கொண்ட இறுதிப் போட்டியில் சுவாரசியமான வெற்றியினை பதிவு செய்து மீண்டுமொருமுறை தமது பலத்தினை வவுனியா மண்ணில் பதிவு செய்திருக்கிறார்கள் யாழ்ப்பாண அணியினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ் அணியினர் முதலில் துடுப்பட்டத்தினை தெரிவு செய்து ஆறு விக்கட்டுக்களைப் பறிகொடுத்து 191 ஓட்டங்களினைப் பெற்றுக் கொண்டனர்.

192 ஓட்டங்கள் என்கிற இமாலய ஓட்ட எண்ணிக்கையினை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பாட்டத்தை ஆரம்பித்த முல்லை அணியினர், மிகவும் மந்த கதியில் ஆடி, தொடர்ச்சியாக பல இலக்குகளைப் பறிகொடுத்து 12.3 ஓவர்கள் நிறைவில் 53 ஓட்டங்களை மட்டுமே மொத்தமாகப் பெற்று தோல்வியினை தழுவிக்கொண்டது.

இதன் அடிப்படையில் 138 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யாழ் அணியினர் முல்லை அணியை வெற்றி கொண்டனர்.

ஆட்டத்தின் நாயகன் மற்றும் தொடர் ஆட்ட நாயகனாக யாழ் அணி சார்பாக 52 ஓட்டங்களையும் மூன்று விக்கட்டுக்களையும் கைப்பற்றிய சூரியகுமார் அஜித் தெரிவுசெய்யப்பட்டார்.






## ஆஷிகா, சுஜந்தன் சிறந்த பளுதூக்கு வீரர்களாக தெரிவு

**யாழ்.விளையாட்டு நிருபர்**

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஆண், பெண், இருபாலருக்குமான பளுதூக்கல் போட்டியில் பெண்கள் பிரிவில் வி. ஆஷிகா சிறந்த பளுதூக்கு வீராங்கனையாகவும் ஆண்கள் பிரிவில் சுஜந்தன் சிறந்த பளுதூக்கு வீரராகவும் தெரிவானார்கள்.

கடந்த (1.10.2020) வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வி. ஆஷிகா சினேக் முறையில் 75 கிலோ எடையையும், கிளின் ஆன் ஐக் முறையில் 95கிலோ எடையையும் மொத்தமாக 170 கிலோ எடையை தூக்கி தங்கப் பதக்கத்தினை பெற்றதுடன் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 7 வருடமாக சிறந்த பளுதூக்கு வீராங்கனையாக தெரிவாகியுள்ளார்.

இவர் 2019 ஆண்டு நாட்டில் நடை பெற்ற தெற்காசிய போட்டியில் இலங்கை சார்பில் பங்கு பற்றி வெள்ளிப் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆண்கள் பிரிவில் உ.சுஜந்தன் சிறந்த பளுதூக்கு வீரராக தெரிவானார்.

இவர் சினேக் முறையில் 100 கிலோ எடையையும், கிளின் ஆன் ஐக் முறையில் 125கிலோ எடையையும் மொத்தமாக 225 கிலோ எடையை தூக்கி தங்கப் பதக்கத்தினை சுவிகரித்தார்.

## இரு பிரிவிலும் யாழ். மாவட்ட பளுதூக்கல் அணி சம்பியன்

**யாழ்.விளையாட்டு நிருபர்**

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான பளு தூக்கல் போட்டியில் இரு பிரிவிலும் யாழ். மாவட்ட பளுதூக்கல் அணி சம்பியனானது. கடந்த (1.10.2020) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்ற பளு தூக்கல் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் பளுதூக்கல் அணி 9 தங்கப் பதக்கத்தினையும், 6 வெள்ளிப்பதக்கத்தினையும், 3 வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று முதலாம் இடத்தினையும்.

வவுனியா மாவட்ட பளுதூக்கல் அணி ஒரு தங்கப் பதக்கத்தினையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தினையும் 2 வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று இரண்டாம் இடத்தினையும் பெற்றன.




முல்லைத்தீவு மாவட்ட பளுதூக்கல் அணி 3 வெள்ளிப் பதக்கத்தினையும் 3 வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றன. யாழ். மாவட்ட ஆண்கள் பளுதூக்கல் அணி 9தங்கப் பதக்கத்தினையும், 6 வெள்ளிப்பதக்கத்தினையும், 4 வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று முதலாம் இடத்தினையும்.

கிளிநொச்சி மாவட்ட பளுதூக்கல் அணி ஒரு தங்கப் பதக்கத்தினையும் பெற்று இரண்டாம் இடத்தினை பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட பளுதூக்கல் அணி 2வெள்ளிப் பதக்கத்தினையும் 3 வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று மூன்றாம் இடத்தினையும்பெற்றமை விசேட அம்சமாகும்.

## வடமாகாண பிரீமியர் லீக் கிரிக்கெட் இறுதியாட்டம்




**யாழ்ப்பாணம் விளையாட்டு நிருபர்**

வடமாகாண பிரீமியர் லீக்கின் 20/20 துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் ஜப்னா கிளாடியேட்டர்ஸ் அணியை எதிர்த்து முல்லை பாந்தர்ஸ் அணி மோதியது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா,

சிறப்பு விருந்தினராக ஸ்ரீலங்கா கிரிக்கெட் உப தலைவர் ரவின் விக்ரமரட்ன,

கௌரவ விருந்தினராகளாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தேசிய மேம்பாட்டு மையத்தின் தலைவர் கமல் தர்மசிறி,

ஸ்ரீலங்கா கிரிக்கெட் தேசிய முகாமையாளர் மனித மறுசீரமைப்பு தினேஷ் டயஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உதைபந்தாட்ட தொடர்

**யாழ்.விளையாட்டு நிருபர்**

